விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பதினாறு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 26 | வியாழக்கிழமை | (11.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 328

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிறந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## நோர்வே அமைச்சர் பீற்றர்ஸன் நேற்று பிற்பகல் இலங்கை வந்தார்

### இரவு ஜனாதிபதி விருந்து: இன்று பிரபாவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகிய இருவரும் நேற்றுப் பிற்பகல் இலங்கை வந்தடைந்தனர்.

இவர்களுடன் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் இணைந்து நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இச் சந்திப்பின்போது ஜனாதிபதி நோர்வேத் தரப்பினருக்கு இரவு விருந்தளித்து உபசரித்தார்.

இவ்விருந்துபசாரத்தின் பின்னர் சமாதான முயற்சிகளின் நகர்வு குறித்தும் நாட்டின் தற்போதைய நிலைப்பாடு பற்றியும் தேக்க நிலையில் காணப்படும் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பது பற்றியும், புலிகளுடனான நேரடிப் பேச்சுக்கள் பற்றியும் இரு தரப்பினரும் நள்ளிரவுவரை விவாதித்தனர்.

இதேவேளை இன்று கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நோர்வேயின் வெளிவிவ

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் உள்ள அநாதைச் சிறுவர் இல்லம் மீது நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது கடும்மழை பெய்துகொண்டிருந்த நேரத்தில் நடத்தப்பட்ட இக் கைக்குண்டுத் தாக்குதலில் சிறுவர் இல்லத்தின் கட்டடத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இச்சம்பவத்தில் எவரும் பாதிக்கப்படவில்லையென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-08)

## சர்வதேசம் உண்மையை உணர்ந்துள்ளது

# தமிழ் மக்களுக்கான தீர்வை சந்திரிகா முன்வைக்கமாட்டார்!

### காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சியிலிருந்து பவன்)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தமிழ் மக்களுக்கு ஒரு திருப்திகரமான தீர்வை ஒருபோதும் முன்வைக்க முடியாது.**

**இந் நிலைமையை இன்று சர்வதேச சமூகமே உணர்ந்துள்ளது. இவ்வாறு தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

நேற்று முற்பகல் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ சட்டக்கல்லூரி வளாக கட்டடத் திறப்பு விழாவில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழ் மக்களின் பிரச்சினையானது தனி ஒரு இனத்தினது வாழ்வுரிமைப் பிரச்சினை என்ற நிலையை விட்டு சர்வதேச சமூகத்தினால் உற்று நோக்கப்படும் சர்வதேச மட்டத்திலான விவகாரமாகிவிட்டது.

சிறிலங்கா அரச தலைமையினால் நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு பாது

(16 ஆம் பக்கம் பார்க்க)




## தமிழீழ சட்டக் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது

(கிளிநொச்சி)

தமிழீழ சட்டக் கல்லூரி வளாகக் கட்டடம் நேற்று முற்பகல் கிளிநொச்சியில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழ நீதிநிர்வாகத்துறை பொறுப்பாளர் பரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைகளின் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றினார்.

மங்கள விளக்கினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் சட்டத்தரணிகள் சங்கத் தலைவியும் சிரேஷ்ட சட்டத்தரணிகளுள் ஒருவருமான சாந்தா அபிமனசிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன்

(16 ஆம் பக்கம் பார்க்க)



திருமதி அடேல் பாலசிங்கம் தமிழீழ சட்டக்கல்லூரியை நாடா வெட்டி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (மேலும் சில படங்கள் உள்ளே...)

படம்: பவன்

## சமாதான பேச்சுக்கள் ஆரம்பித்தால் ஐ.தே.கட்சி கவுன்சிலில் இணையும்

### பேராசிரியர் பீரிஸ் அரசுக்கு சமிக்ஞை

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகின்றது.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி உடனேயே சமாதானத்திற்கும நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி பங்கேற்கும் என்று கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பமாவதற்குத் தேவையான பின்னணியினை ஏற்படுத்துவதற்கு சர்வதேச

(16 ஆம் பக்கம் பார்க்க)

குமார் ஏஜன்ட் and கொம்யுனிகேசன்
இல. 133/3 மின்சார நிலைய வீதி
மத்திய பேருந்து நிலையம் அருகாமை
யாழ்ப்பாணம். T.P. 0212227727
WESTERN UNION
Phone : 94212227727
Mobile : 94777571995
Fax : 94212223453
E-mail : kumar apo@ sltnet.lk
MMBL Money Transfer (Pvt) Ltd.
Money Transfer, Internet, E-mail, I.D.D, Local calls, Fax, Express Parcel Service, S.L.T, Pass Port, kit, Mobitel, Super Cards, Lamination & Photo Copy.

AERO LANKA
Jaffna to Ratmalana
Jaffna to Trinco
(c/691)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# தீபாவளி எச்சரிக்கை

ஒருவர் வந்தார். "சார் நான் ஒரு கடை வைத்தேன். வியாபாரம் சூடு பிடித்தது அதனால் நான் நஷ்டம் அடைந்து விட்டேன்" என்றார். "அது எப்படி சார்? நீங்கள் என்ன கடை வைத்தீர்கள்?" என்று கேட்டேன் "பட்டாசுக் கடை" என்றார். பட்டாசுக்கடை சூடு பிடித்தால் என்னாகும்? அந்த ஆள் உயிரோடு தப்பியதே பெரியகாரியம்.

சரி... எதற்கு இந்த ஆரம்பம் என்று கேட்கிறீர்களா? இன்று தீபாவளி அல்லவா? நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்துவதற்காகத் தான் ஒவ்வொருவரிடமும் தீபாவளிக்குப் பின் பத்திரிகை வாசித்தீர்கள் என்றால் வெடிவிபத்து சம்பந்தமான செய்திகளுக்குப் பஞ்சம் இருக்காது ஏன் அப்படி?

எல்லாவற்றுக்கும் கவனக் குறைவு தான் காரணம். கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தால் எந்தக் கஷ்டமும் வராது. இது தொடர்பான சில குறிப்புக்களைப் பெரியவர்கள் தந்துள்ளார்கள். அவற்றை உங்களுக்கும் அறியத்தந்தால் நல்லது என்று நினைத்தோம் அது தான் இப்படி ஆரம்பித்தோம்.

சரி. அவர்கள் அப்படி என்ன தான் சொல்கின்றனர். பெரியதாக ஒன்றுமில்லை. எல்லாம் நமக்குத் தெரிந்த விடயம் தான். இருந்தாலும் இந்த நேரத்தில் அவற்றை நினைவூட்டுவதில் ஒன்றும் தவறில்லை. பட்டாசு கொளுத்தும் போது மட்டும்தான் கவனமாக இருக்க வேண்டுமென்றில்லை. கொளுத்துவதற்கு முன்னாலும் அதைப் பத்திரமாக வைக்கவேண்டும்.

பட்டாசு ஈரமாக உள்ளது. அதைக்காய வைக்கிறேன் என்று கூறிக்கொண்டு அடுப்படிக்குப் பக்கத்தில் காய வைக்கக்கூடாது. கொளுத்தும் இடத்திற்குப் பக்கத்திலும் வெடிகளை குவித்து வைக்கக் கூடாது அதனாலும் பல இடங்களிலும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

வெடிவெடிப்பது, மத்தாப்பு கொளுத்துவதெல்லாம் பிள்ளைகளின் வேலை என்று நினைத்துக்கொண்டு பெற்றோர் வேறு வேலைகளைக் கவனிக்கப் போய் விடக்கூடாது. பிள்ளைகள் மீது எப்போதும் ஒரு கண் இருக்க வேண்டும். சில வெடிகள் திடீரென்று வெடித்தும் விடும். அதனால் எப்போதும் தூர இருந்து கொண்டு பாதுகாப்பாக வெடிக்க வைக்க வேண்டும் சில வெடிகள் கம் மென்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டிருக்கும். என்ன வென்று அருகில் போய் குனிந்து பார்ப்பார்கள் அப் போது திடீரென்று வெடித்து முகத்தில் காயம் பட்டவர் கள் நிறையப் பேர் உள்ளனர்.

அதிகமாக ஆபத்து ஏற்படுவது பூவாணத்தினால் தான். சிலர் அதைக் கையில் வைத்துக்கொண்டே கொளுத்துவார்கள். சமயத்தில் அது திடீரென்று வெடித்து விடும். கைபோய் விடும். ரொக்கெற் விடும் போதும் எச்சரிக்கை தேவை. அது புறப்பட்டு எங்கே போகின்றதென்றும் சொல்ல முடியாது. சில சமயங்களில் எதிர் வீட்டுக் கூரை க்கும் போகும். கொஞ்சம் ஏமாந்தால் நம் முகத்திற்கு நேராகவும் வரும். முக்கியமாக பெண் பிள்ளைகள் கம்பி மத்தாப்பு போன்றவற்றைக் கொளுத்தும் போது கையை நன்கு நீட்டிப் பிடித்துக்கொள்ள வேண்டும் தீப்பொறி உடையில் பட்டு விடும். பருத்தித் துணியாக இருந்தால் தீப்பிடித்தாலும் இயன்ற அளவுக்கு தப்பிக் கொள்ளலாம்.

திடீரென்று நமது உடையில் தீப்பிடித்துக்கொள்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே என்ன செய்யவேண்டும் தெரியுமா? அங்குமிங்கும் ஓடக் கூடாது. ஓடினால் காற்றில் தீ அதிகமாகும். கீழே விழுந்து புரளவேண்டும். நெருப்பு உடலில் பட்டால் உடனே அந்த இடத்தில் நீர் விட்டுக் கழுவ வேண்டும். எரிச்சல் நீங்கும் வரைக்கும் நீர் ஊற்றிக் கொண்டே இருக்கலாம். அதன்பின் டாக்டரிடம் போகலாம். தீப் புண்ணில் தண்ணீர் படக்கூடாது என்று நினைப்பதுண்டு. இது தவறு. இப்போது டாக்டர்கள் அந்த இடத்தில் குளிர்ந்த நீரை ஊற்ற வேண்டுமென்று சொல்கின்றனர். நெருப்பு வெடி ஏதாவது கண்ணில் பட்டுவிட்டால் கண்ணைக் கசக்கக்கூடாது. உடனே கண் டாக்டரிடம் போக வேண்டும்.


இப்படிச் சில விடயங்களை மனதில் வைத்துக் கொண்டே தீபாவளியைக் கொண்டாடுங்கள். அப்போது தான் தீபாவளி சந்தோஷமாக இருக்கும். இன்று பல வீடுகளில் தலை தீபாவளிக்காக மாப்பிள்ளையும் பெண்ணும் வந்திருப்பார்கள். அவர்களையும் கவனித்துக் கொள்ளுங்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு பெரியவரைப் பார்த்தேன் "என்ன சார் இந்தத் தீபாவளிக்கு உங்கள் மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டு வரப் போகிறீர்களா?" என்றேன் . "அதற்கு அவசியமே இல்லை" என்றார் அவர். 'ஏன்?' என்று கேட்டார். "போன வருடம் தீபாவளிக்கு வந்த மாப்பிள்ளை இன்னும் போகவே இல்லை" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழர் தரப்பின் உண்மை நிலைப்பாடு புதுடில்லிக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர்கள் தரப்பில் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற நாம் எமது மக்களுடைய கருத்துக்களையும் அபிலாஷைகளையும் நாம் புதுடில்லிக்குச் சென்று கூறாமல் இருப்பது எம் மக்கள் மீதும் எமது போராட்டத்தின் மீதும் ஒரு தப்பான அபிப்பிராயம் ஏற்பட வழி சமைக்கும் என்பதற்காகத்தான் .

இதனால் பாதிப்படையப்போவது தமிழ் மக்களே என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியத் தலைவர்களுக்கு எமது நிலைப்பாட்டினை விளக்கமளிக்க வேண்டியது அவசியமாகும். அதற்கு ஒருபோதும் எமது அங்கத்தவர்கள் மறுப்புத் தெரிவிக்கவில்லை. அது நிச்சயமான ஒரு தேவைப்பாடாகவும் காணப்படுகின்றது. ஆனால்,அது விடயம் சம்பந்தமாக நாங்கள் செயற்படாமல் இருக்கவில்லை. இது தொடர்பில் இலங்கையில் தற்போதும் பதவி ஏற்றுள்ள புதிய இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் மற்றும் ஏனைய இந்தியத் தூதரக அதிகாரிகளுடனும் பேசியிருக்கின்றோம்

எமது மக்களின் நிலைப்பாட்டின்ன புதுடில்லிக்கு விளக்கமளிக்காதது எமக்குப் பாதிப்பினையே ஏற்படுத்தும். இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட, வேண்டும். தமிழ் மக்களுடைய கருத்துக்கள் புதுடில்லியில் உள்ளவர்களுக்குக் கூறப்படவேண்டும். அதனை அவர்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

நிச்சயமாக அங்கு செல்கின்ற ஏனைய தலைவர்கள் கூறும் தமிழ் மக்கள் குறித்த கருத்துக்கள் தமிழ் மக்களுடைய ஆணையைப் பெற்றவர்கள் கூறுகின்ற கருத்துக்களை உள்ளடக்கி இருக்காது.

எமது மக்களின் அபிலாஷைகள் நிச்சயமாக அங்கு தெரிவிக்கப்பட்டிருக்கமாட்டது. தமிழ் மக்களின் உண்மை நிலைப்பாடு புதுடில்லிக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைகள், அபிலாஷைகள் தெரியப்படுத்தப்படும் பட்சத்திலேயே இந்தியத் தலைவர்கள் இது விடயம் குறித்து நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அத்துடன், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலைக்கு தமிழர் தரப்புக் காரணமல்ல. தென்னிலங்கையில் உள்ள அரசியல் பேரினவாதத் தலைவர்களிடையே உள்ள போட்டியே தறபோதைய சமாதான முயற்சிகள் தடைப்பட்டு தாமதமடைவதற்குப் பிரதான காரணமாகும்.

அதனால் எமது நிலைப்பாட்டினைப் புரிந்துகொண்டு அவர்க்ள் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு விளக்கம் அளிக்குமாறு கோரிக்கை விடுப்போம் எனவும் குறிப்பிட்டார்.(ற-121)

# சாத்தியமற்ற மேம்பாட்டு திட்டங்களால் முன்பள்ளிச் சிறார்கள் பாதிக்கப்படுகின்றனர்

## யாழ். குடாநாட்டில் அவலநிலை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்குகின்ற 580 முன்பள்ளிகளில் அரைவாசிக்கு மேற்பட்ட முன்பள்ளிகளில் கட்டட, தளபாட வசதிகள் இல்லாமையினால் அங்கு பயில்கின்ற கிராமிய சிறார்கள் நிலத்தில் இருந்தே தமது கல்வியைப் பெற்று வருகின்றனர்.

முன்பள்ளிகளின் தரங்களை உயர்த்துவது தொடர்பாக பல்வேறு விதமான முயற்சிகள் கடந்த காலங்களில் எடுக்கப்பட்டிருந்த போதிலும்கூட,அவற்றில் எதுவுமே நடைமுறையில் சாத்தியமாகவில்லை என முன்பள்ளி ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இது விடயத்தில் கல்வித் திணைக்களமோ அன்றி அரச சார்பற்ற நிறுவனங்களோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதனையும் செய்யவில்லை. குறிப்பாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த மதிப்பூதியம் மற்றும் முன்பள்ளிச் சிறார்களுக்கான போஷாக்கு உணவு வழங்கல் போன்ற திட்டங்கள் இன்னமும் அதன் இலக்கினை அடையவில்லை.

இன்றைய நிலையில் முன்பள்ளி ஆசிரியைகளின் தொழில் பாதுகாப்பு, நிரந்தரம் போன்றவை சாத்தியப்பாடனவையாகத் தென்படவில்லை. இந்நிலையில் 1995ஆம் ஆண்டு முதல் இன்று வரை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பல்வேறு நிறுவனங்களால் ஆளுமை விருத்திப் பயிற்சிகளும, கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டிருந்தனவேயொழிய குறிப்பிடும் படியான திட்ட அபிவிருத்தியோ முன்னேற்றமோ ஏற்படவில்லை.

ஆக மொத்தத்தில் பயிற்சிகளிலும், கருத்தரங்குகளிலும் நிதியும், காலமும் விரயமாக்கப்பட்டுள்ளனவே தவிர வேறு எவ்வகையான மாற்றமும் ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இன்னும் கிராமிய மட்டங்களில் முன்பள்ளி ஆசிரியைகளாகச் சேவையாற்றி வருகின்ற முன்பள்ளி ஆசிரியைகள் வறிய பெற்றோரின் நிதிப் பங்களிப்பிலேயே தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

## இராசி பலன்

**11.11.2004 (ஐப்பசி 26, வியாழக்கிழமை)**
**சதுர்த்தசி முன்னிரவு 10.11 மணிவரை**
**சித்திரை முற்பகல் 10.14 மணிவரை**
**இராகுகாலம் 1.36-3.06 மணிவரை**
**சுபநேரம் 07.36- 09.06 மணிவரை**
**சித்தாமிர்தம்**
**கௌரி விரதம் 20ஆம் நாள்**

**மேடம்** புதியபொருள் சேர்க்கை, உறவினர் வருகை, காரியசித்தி, களஸ்திர நன்மை.

**இடபம்** குதூகலம், தெய்வசிந்தை, எடுத்த கருமங்கள் கைகூடும், தேகநலன்.

**மிதுனம்** பணக்குறைவு, அஜீரணரோகம், மனக்கவலை, போசனசுகக் குறைவு.

**கடகம்** புத்தி சஞ்சலம், எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம், நண்பர்கள சந்திப்பு.

**சிங்கம்** குதூகலம், புதியபொருள் சேர்கை, காரியநன்மை, உறவினர் வருகை.

**கன்னி** அதிகசெலவு, மனோசங்கடம், எடுத்த கருமங்கள் தாமதமாகும், போசன சுகம.

**துலாம்** கௌரவமானநிலை, மனமகிழ்ச்சி, மாதர்நட்பு, நல்லமுயற்சி.

**விருச்சிகம்** சோம்பல் நிலை, அமைதக் குறைவு, காரிய தாமதம், உறவினர் சந்திப்பு.

**தனுசு** நண்பர்கள் சந்திப்பு, தனதானிய சேர்கை, காரியசித்தி, கீர்த்தி.

**மகரம்** நன்கொடை, எடுத்தகாரியம் கைகூடும், நல்லசம்பவம், தனலாபம.

**கும்பம்** வீண்பயம், காரியதாமதம், தேகாந்திர வாசம், ரோகநிலை.

**மீனம்** வாகன பயம், அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம், மனஸ்தாபம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**
—வளவன்

## வரவு–செலவுத் திட்டம் குறித்து நிதி அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினால் எதிர்வரும் 18ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள முதலாவது வரவு- செலவுத் திட்டத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

அத்துடன், மேற்படி துறை ஒவ்வொன்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுவதால் இத்துறைகளுக்காக கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஹட்டுகஸ்தோட்ட புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, கல்வி,சுகாதாரம், போக்குவத்துத் துறைகள் சார்ந்த அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் திட்டங்கள் வகுக்கப்படுவதாக வெளியான தகவல்களை அவர் நிராகரித்துள்ளார். (ற-121)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பி.ப.6.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவில் நாளை வெள்ளிக்கிழமை ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியை செல்வி. ஜெ.இராஜமல்லிகை "கௌரி நோன்பு' என்னும் விடயம் குறித்து சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ற)

# மூல நோயும் மலச்சிக்கலும்

(தொடர்ச்சி)

3

மேற்கூறிய சிக்கல்கள் தோன்றாதிருக்க அறுவைச் சிகிச்சைக்குப் பின்வரும் வழிகளைப் பின்பற்றுதல் நன்று.

1. ஒரு நாளில் இருதடவை குளித்தல் வேண்டும். இதன் மூலம் மலவாசலை சுத்தமாக வைதிருக்க வேண்டும்.

2. மல இளக்கிகளை உபயோகித்தல் வேண்டும்.

3.நோ நிவாரணிகளை உட கொளளல் வேண்டும்.

4. பத்தாவது நாள் குத வாசல சிறிது விரிவாக்கப்படுகின்றது. (Anal Dilatation) இ்.து பின்னர் குதச்சுருக்கம்/ குதவெடிப்பு உண்டாவதைத் தடுக்கும்.

## மூலநோய்க்குரிய தடுப்பு முறைகள்

மூலநோய் வயதானவர்களில் காணப்படும் ஒரு பொதுவான பிரச்சினையாகும். இவர்களில் குடற்தசைகளின் வலுவற்ற தன்மையாலும், வேறுபல காரணங்களாலும் மலச்சிக்கலுண்டாகின்றது. இது நீடிக்கும் போது அவர்களுக்கு மூலநோய் ஏற்படுகின்றது. இதைவிட ஏனைய வயதினரிலும் பலருக்கு மூலநோய் ஏற்படுவதை நாம கண்டு வருகிறோம். முன்னர் விபரித்தவாறு மூலநோய் பல காரணங்களினால் ஏற்படினும், மலசசிக்கலே அதற்குரிய முக்கிய காரணியாகும் எனவே நாம் மலச்சிகலுகுரிய காரணங்களை ஆராயந்து அது ஏற்படாமல் தடுக்கும வழி முறைகளையும் அறிந்து கொளவோம்.

## மலச்சிக்கல்

மலச்சிக்கல் எனும் சொல்லை எளிதில் வரையறுக்க முடியாது. ஏனெனில் ஒருவருடைய மலம் கழிகம் பழக்கத்தை கொண்டே அருக்கு மலச்சிக்கல் உண்டா இல்லையா என்பது தீர்மானிக்கப்படுகின்றது. மலம் கழிக்கும் பழக்கம் ஒவ்வோர் மனிதனுக்கும் வேறுபட்டதாகும்.

## மலச்சிக்கலுக்குரிய காரணங்கள் :-

**1. சீரான் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாமை**

காலை எழுந்தவுடன் காலைகடன கழிக்கும் சீரான பழக்கம் உள்ளவர்கள் எண்ணிக்கையில் வெகு சொற்பமே அநேகமானோர் உடலில் மலம் கழிக்கும் உணர்ச்சி வரும் வரை பொறுத்திருக்கிறார்கள். இவ்வுணர்ச்சி ஏற்படும் நேரத்திலோ, இவர்கள் அலுவலகத்திலோ, வாகனங்களில் பிரயாணித்துக் கொண்டே மலம் கழிக்க இயலாத சூழ்நிலையில் அவஸ்தைப்படுகிறார்கள். எனவே இவ்வுணர்ச்சியை அடக்க பழகிக கொள்கிறார்கள். இதுவே பழக்கமாகிவிடுகின்றது. இப்படி இரண்டு மூன்று நாட்கள் தள்ளிப் போடும் போது மலத்திலுள்ள ஈரப்பசை படிப்படியாகக் குறைந்து இறுக்கமான மலம் மேலும் இறுகிக் கெட்டியாகி விடுகின்றது. இது பெருங்குடலினூடாக மலம்நகர் தலைச் சிரமாக்குகின்றது. இதனால் நீடித்த மலச்சிக்கல் உண்டாகின்றது.

**2. உணவுடன் போதிய அளவு நீர் அருந்தாது விடல் :-**

உணவு சமிபாடடைவதற்கு வேண்டிய அளவு நீர் இல்லாததால், ஜீரணமாகாத உணவின் அளவுஅதிகரிப்பதுடன் பெருங் குடல் பகுதியில் ஈரத்தன்மையும் குறைகின்றது. இதனால் மலம் இறுதி கடினமாகின்றது,

**3. தவறான உணவுப் பழக்கங்கள்:-**

தகுந்த அளவு நார்ப்பத உணவுகளை (Fibrediet) உணவல் சேர்த்துக் கொள்ளாது விடல். நார்ப்பத உணவுகள் குடலின் சுருக்கிவிரியும் தன்மைக்கு உதவியாக உள்ளன. எனவே மலம் எளிதில் வெளியில் செல்ல உதவுகின்றன.

**4. அளவுக்கு மீறி உணவு உண்ணல் :-**

அளவுக்கு மீறிய உணவை அடிக்கடி உண்ணும்போது அரை குறையாகச் சமிபாடடைந்த உணவு மலக் குடலில் அதிகமாகச் சேர்ந்து விடுகின்றது. இது மலம் கழித்தலை கடினமாக்குகின்றது.

## மலச்சிக்கலைத் தடுத்தல்

மலச்சிகலைத் தடுத்து அதன மூலம் மூலநோயின்றி வாழ பின் வரும் எளிய முறைகளை கடைப் பிடித்தல் வேண்டும்.

1. எளிதில் கிடைக்கும் பழவகைகளில் ஒன்றையெனும் நாளாநத ஊணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(உ+ ம்) பப்பாளிப்பழம், மாம்பழம், திராட்சை, வாழைப்பழம் போன்றன.

2. உணவில் கீரைவகைகளை இயலுமான பொழுதெல்லாம் சேர்த்துக் கெள்ளல். பின்வருபவை மிகவும் வேண்டியவை. அகத்திக கீரை, பொன்னாங்கணணி, பசளி, முள்ளங்கிக்கீரை, முருங்கை இலை, வட்டத்துத்தி இலை, புளியாரைக் கீரை

3. அதிகமான மரக்கறிவகைகளை சேர்த்துக் கொள்ளல் கத்தரிக் காய், வாழைப்பூ, வாழைக்காய், கரணைக்கிழங்கு, வெண்காயம் போன்றவை.

மேலும் பெருங்காயம், மிளகு, பூடு, இஞ்சி என்பவற்றை அளவான முறையில் உணவில் சேர்த்துக் கெள்ளல். இவை ஜீரணத்தன்மையைக் கூட்டி மலச்சிக்கலைத் குறைக்கும். இவற்றை விட பசு நெய், மோர் என்பவை மலத்தை இளக்கி மலச்சிக்கலைப் போக்கும.

5. மிளகாயை உணவிலிருந்து தவிர்த்துக் கொள்ளல் வேண்டும.

6. உணவு அருந்தியவுடன் நன்றாக நீர் அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதைவிட இரவில் உறங்க முன்பு வெந்நீரையும் காலை எழுந்தவுடன் குளிர்நீரையும் அருந்தப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

7. நாள் தவறாமல் காலையில எழுந்தவுடன் காலைக்கடன் கழிக்கும் பழக்கத்தை கடைப்பிடித்தல இதனைவிட மல்ம் கழிக்கும் உணர்ச்சி ஏற்படுகையில் சோம்பேறித்தனமாக அதை அடக்கி வைக்காமல் உடனே மலம் கழித்தல்.

**8. மல இளக்கிகள் :-**

மேற்கூறப்பட்ட பழக்கஙகளை ஏறபடுத்தியும் மலச்சிக்கல் தீராது விடின மட்டும் மல இளக்கிகளை உபயோகிக்கலாம. மல இளக்கிகளை தொடர்ந்து உபயோகித்தல் உடல் ஆரோக்கியததிற்கு கெடுதலானதாகும்.

பின்வரும் வகையான மல இளக்கிகள் (Laxatives) தற்போது உபயோகத்திலுள்ளன.

**1. வாயினூடு உட்கொள்ளும் மாத்திரைகள் :-**

அ . **Senokot** மாத்திரைகள்
ஆ. **Bisacodyl (Duleoiex)** மாத்திரைகள்
இ . **Milk of magnesia**

**வைத்திய கலாநிதி**
**இந்துமதி**

2 . மலக்குடலில் வைக்கும் மாத்திரைகள் (**Suppositories**)
அ. **Glycerin Suppository**
ஆ. **Dulolox Suppository**

இவற்றை உபயோகித்தும் மலச்சிக்கல் தீராவிடின் குதவடி (**Eneme**) முறையை பின்பற்றலாம். ஆனால் இம்முறையைத் தகுந்த ஆலோசனையின்றி உபயோகித்தல் கூடாது.

மேற்கூறிய ஆலோசனைகளைக்கைக் கொண்டு, மலச்சிக்கலை தவிர்த்து, உளச்சிக்கல இன்றி வாழலாம்.

அநேக கர்ப்பிணித்தாய்மார்களுக்கு எற்படும் மூல நோய் குழந்தை பிறந்தவுடன் தானாகவே குணமடைந்து விடுகின்றது.

ஏனெனில் இங்கு குதநாளப் புடைப்புக்களில் உள்ள கர்ப்பப்பை அழுத்தம் குறைவதுடன். **Prosgesterm** ஓமோனின் தாக்கமும் இல்லாது போகின்றது.

(இன்னும்)

# எஸ். பி. திஸநாயக்க பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

சட்டவிரோதமாக சொத்துக்களைச் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி திஸநாயக்காவை பிணையில் செல்ல கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னாள் அமைச்சர் எஸ். பி திஸநாயக்காவை ஆஜர்ப் படுத்திய லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் அவருக்கு எதிராக மேல் முறையீட்டு நீதிமன்றில் வழக்கத் தாக்கல் செய்யத்தாம் தீமானித துள்ளதாகத் தெரிவித்தனர்.

இத்துடன் சந்தேக நபரைப் பிணையில் விடுதலை செய்வதற்கு தாம் ஆட்சேபனை தெரிவிக்க வில்லை என்றும் நீதிபதியிடம் கூறினார்கள்.

இதனையடுத்து கொழும்பு மஜிஸ் திரேட், எஸ். பி .திஸநாயக்காவை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒருகோடி ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்யுமாறு உத்தவிட்டார்.

1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திக்திக்கும் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அமைச்சராகக் கடமையாற்றிய திஸநாயக்க தனது பதவிக்காலத்தில் வருமானத்திற்கு மேலதிகமாக 2 கோடி 90 லட்சத்தை சேர்த்திருந்தார் என லஞ்ச ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளதுடன் இந்தப் பணத்தை எவ்வாறு சேகரித்தார் என்ற விடயத்தை தமக்கு விளக்கத் தவறிவிட்டார் எனவும் நீதிபதியிடம் சுட்டிக்காட்டியது. (க-60)

# சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கைதடி அரசினர் ஆயுள் வேதவைத்தியசாலையினுள் பெருந்தொகையான புல் பூண்டுகள் முளைத்து பற்றைகள் காணப்பட்ட போதும் அதை துப்பரவு செய்வதற்கு எதுவித நிதியும் ஒதுக்கப்படாததையடுத்து கைதடிப் பிரதேசசபை உறுப்பினர்களும் கைதடி பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவினரும் இணைந்து நேற்றைய தினம் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (ந-19,16)

# பொலிஸாரால் மீட்பு

(நாவற்குழி)

நாவற்குழி சந்தியில் பொலிஸாரால் ஹன்டர் வாகன மொன்றிலிருந்து பெருமளவு களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்படடுள்ளன.

மேற்படி வாகனத்தில் சந்தேகம் கொண்ட பொலிஸார் வாகனத்தில் வந்தவர்களை தீவிர விசாரனைக்கு உட்படுத்தி சோதனை செய்த போதே உண்மை புலப்பட்டது. (ப-47)

# சான்றிதழ் வழங்கலும் புதிய பிரிவு ஆரம்பமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் கணனி நிறுவனமாகிய வேலணை இலவச கணனிப்பயிற்சி நிலையத்தின் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பின் ஆதரவோடு நடாத்தப்பட்ட இலவச கணனிப் பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், புதிய பிரிவுகளின் ஆரம்ப வைபவமும் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கணனிப்பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவ ஒன்றியத்தலைவர் ப. குணேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருத்தினராக வேலணை மத்திய கல்லூரி அதிபர் அருணகிரிநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப்பொறுப்பாளர் ச. எழிலன்பன் மற்றும் வேலணை தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ம.அம்பிகைபாகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பொதுச் சுடரினை பிரதம, சிறப்பு விருந்தினர்களும், தீவக மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஜெகன், வேலணை கடற் தொழிலாளர் சங்கத்தலைவர் கார்த்திகேசு ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து பிரதம சிறப்பு விருந்தினர்களும் வேலணை அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ். நம்பியும் உரையாற்றினார். அதனை அடுத்து பயிற்சியை நிறைவு செய்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து புதிய பிரிவுகளின் ஆரம்ப வைபவம் இடம் பெற்றது. (ந)

# பாதீனிய ஒழிப்பு வாரம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசசெயலகததினால் எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரை பாதீனிய ஒழிப்பு வாரமாக அனுஸ்டிக்கபடவுள்ளது.

கோப்பாய்ப் பிரதேச செயலகததிற்குட்பட்ட நீர்வேலி, புத்தூர் மறறும் ஆவரங்கால் பகுதிகளில் பாதீனியம் அதிகமாகப் பரவிக் காணப்படுகின்றது. இதனாலேயே இவற்றை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அடுத்த வாரம் பாதீனிய ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தினங்களில் கோப்பாய் பரதேச செயலகத்தற்கு உட்பட்ட விவசாயசம்மேளம மற்றும் சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் அங்கத்தவர்கள் கிராமசேவையாளார்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். (ந-19,16)

# சிறுவிளம்பரம்

## சமாதானப் பிரார்த்தனை

வெள்ளிக்கிழமை விரதவழிபாட்டு விடுமுறை பெற்றுச் சகலரும சமாதான பிரார்த்தனையில் கலந்து கொள்க!

இந்து அரச ஊழியர்கள் இணையம். (8978)

## ஆனந்தி திருமண சேவை

இலண்டனில் தொழில் புரியும் விஞ்ஞானப் பட்டம் பெற்ற இந்து வேளாள குடும்பத்தவர், 1971 ல் பிறந்த கார்த்திகை நட்சத்திரம் இடபராசி கிரகபாவ சங்கியை மூன்று சுற்றுக்கும் 10/16, உயரம் சுமார் 6 அடி, செவ்வாய் தோஷ மற்றவருக்கு சுவிஸ், கனடா, லண்டனில் நிரந்தர விஸா பெற்றுள்ள மணப்பெண்ணை விரும்புகின்றோம். கடித மூலமும் நேரடியாகவும் தொடர்பு கொள்ளலாம். எம்மிடம் எல்லா குலத்தவர்களினதும் ஜாதகக் குறிப்புக்கள் திருமண நிமித்தம் சேகரித்து வருகின்றோம். பொருத்தமான ஜோடிகள் சேர்த்து வைக்கப்படும். தகவல் முகவரி. V.A சிவராசா சோதிடர், இல: 01, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (9000)

## விஸ்தரிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி பஸ் சேவையை திங்கள் தொடக்கம் வெள்ளிவரை விஸ்தரிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இவ் பஸ்சேவை விஸ்தரிக்கப் படாததால்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-126)

## "தார்மீக விழுமியங்கள்" புதிய பாடம் அறிமுகம்

(கொழும்பு)

அரசபாடசாலைகளின் பாடத்திட்டத்தில் தார்மீக விழுமியங்கள் என்ற புதிய பாடமும் அடுத்த வருடத்தில் இருந்து சேர்த்துக் கொள்ளப்படும் எனப் பிரதிக் கல்வி அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார்.

சரித்திரம்,இலக்கியம் ஆகிய பாடங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(க-60)

## சல்வீனியா அழிப்பு

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் பரவியுள்ள "சல்வீனியா" தாவரத்தைமுற்றாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் யாழ். மாநாகர சபையால் தற்போது மேற்கொள்ளப்படுகிறது.

குளத்திலிருந்து அகற்றப்படும் இச் சல்வனியாக் கொடிகள் உழவு யந்திரங்கள் மூலம் கழிவுகள் கொட்டப்படும் இடங்களுக்கு அப்புறப்படுத்தி அழிக்கப்பட்டு வருகிறது (ப-130,29)

## வட்டிவீதம் குறைப்பு

(துன்னாலை)

சமுர்ததி வங்கியினால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு இதுவரை காலமும் 24 வீதவட்டி அறவிடப்பட்டது.

தற்போது சமுர்த்தி அதிகார சபையின் வங்கிநிதிப்பிரிவின் பணிப்பிற்கமைய வட்டிவீதம் 18 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இந் நடமுறை கடந்த ஒக்டோபர் 1ஆம் திகதியில் இருந்து அமுல் படுத்தப்பட்டுள்ளது. (ப-101)

## மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேசசபை நூலகத்திற்கு முன்னால் இருந்த மிகப் பொிய வாகைமரம் ஒன்று சென்ற மாதம் பெய்த கடும் மழையினால வேருடன் சரிந்து விழுந்தது.

இம்மரம் சரிந்து விழுந்து 2 வாரங்கள் கடந்து விட்டபோதும் அதன் பாகங்கள் அங்கிருந்து அகற்றப்படாமல் இருக்கின்றமை குறிதது மக்கள் விசனம் தெரிவிததுள்ளனர். (ப-19)

# யஸீர் அரபாத் மரணமா? மீண்டும் சர்ச்சை கிளம்புகிறது

பலஸ்தீன விடுதலை இயக்க தலைவா யஸீா அரபாத் மரணம் அடைந்ததாகவும் உயிருடன் இருப்



பதாகவும் முரண்பட்ட தகவல்கள் வெளியாகி வருகின்றன.

பலஸ்தீன விடுதலை இயக்க தலைவரும் பலஸ்தீன அதிபரு மான யஸீா அரபாத் உடல் நிலை கவலைக்கிடமாகி பரிசில் உள்ள இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். 75வய தான அரபாத், ஆழ்ந்த கோமா நிலையில் சுயநினைவு இல்லா மல் இருந்தார். அவரது கல்லீரல் உட்பட ஜீவாதார உறுப்புக்கள் செயலிழந்தன. உயிர்காக்கும் சாத னத்தில் அவர் வைக்கப்பட்டிருந் தார். அவரது உடல்நிலைபற்றி முரண்பட்ட தகவல் வெளிவந்தன. அவர் இறந்துவிட்டார் என்றுகூட இஸ்ரேல் இணையத்தளம் செய்தி வெளியிட்டது.

எனவே அரபாத்தின் உடல் நிலையை நேரில் கண்டறிவதற் காக பலஸ்தீன பிரதமா அகமது குரி, வெளியுறவுத்துறை மந்திரி நபில்ஹாத், பலஸ்தீன விடுதலை இயக்க பொதுச் செயலாளர் முக மது அப்பாஸ் அகியோர் பரிஸ் செல்ல முடிவு செய்தனர்.

ஆனால் அரபாத்தின் மனைவி சுகா அந்த 3 பேரும் அரபாத்தைப் பார்க்க தடைவிதித்தார். அவர்கள மருத்துவமனைக்குச்சென்று அர பாத்தை உயிர்காக்கும் கருவியில் இருந்து அகற்றிவிட்டு உயிரோடு புதைக்கத் திட்டமிட்டுள்ளனா என்று சுகா குற்றஞ்சாட்டினார். 41 வய தான சுகாவை அரபாத் தனது 63வயதில் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு ஒரு குழந்தையும் உள்ளது. சுகா கடந்த மூன்றரை ஆண்டுகள் அரபாத்தை பிரிந்து பரிசில் வசித்துவந்தார்.

அரபாத் சுகாவின் தனிப்பட்ட சொத்து அல்ல. பலஸ்தீனத்தின் தலைவர். அவரைப் பார்க்க எங் களுக்கு உரிமை உண்டு என்று அவர்கள் கூறினார்கள்.

அதைத்தொடர்ந்து பிரதமர் அகமது குரி உட்பட 3 பேரும் பரிஸ் சென்றனா. அரபாத் சிகிச்சை பெறும இராணுவ மருத்துவமனைக்குச் சென்று அரபாத்தை அவர்கள் பார்த்தனா. அரபாத்தின் உடல் நிலைபற்றி அவருக்குச் சிகிச்சை அளிக்கும் தலைமை டாக்டர் கிருஸ்டியன் எஸ்ட்ரிபியேவிடம் கேட்டறிந்தனா. அரபாத் உடல் நிலைபற்றி இராணுவ மருத்துவ மனையின் தலைமை டாக்டர் கிரிஸ்டியன் முதன் முதலாக அதி காரபூர்வமாக அறிவித்துள்ளார். அவர் கூறியதாவது,

அரபாத் ஆழ்ந்த கோமா நிலைக்கு சென்றுவிட்டார். அவரது உடல் நிலை கணிசமான அளவு மோச மடைநதுவிட்டது. அவா மரணத்தை நெருங்கிவிட்டார் என்று கூறினார்.


அரபாத்தைப் பார்த்த பலஸ் தீனப் பிரதமா அகமதிகுரி உட்பட தலைவர்கள், அவருக்குச் சிகிச்சை அளித்த டாக்டர்களிடம் அரபாத் உடல்நிலைபற்றி விபரம் கேட்டனா.

அதன்பிறகு அவர்கள் கூறும் போது, அரபாத் மணிக்கணக்கில் தான் உயிரோடு இருப்பார் என்று கூறினார்கள். அவர்கள் இவ்வாறு கூறிய சிறிது நேரத்தில் அரபாத் மரணமடைந்துவிட்டதாக அரபாத் திற்கு நெருங்கிய அதிகார வட் டாரங்கள் தெரிவித்தன. ஆனால் அது அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்படவில்லை. அரபாத் மர ணமடைந்ததாக வந்த செய்தியை பலஸ்தீன வெளியுறவு அமைச்சர் நபில்ஷாத் மறுத்தார்.

அரபாத் உடல்நிலை மோசமடைந்தாலும், அவரது ஜீவாதார உறுப்புகள் எதுவும் செயலிழந்த தாகத் தெரியவில்லை. உயிர் காக்கும் சாதனத்தில் அவர் உயி ரோடுதான் இருக்கிறார். அதிலி ருந்து அவரை அப்புறப்படுத்தும் பேச்சுககு இடமில்லை. கருணைக கொலையில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது என அவர் கூறினார்.

அரபாத் இறந்ததாக வந்த செய் தியை பிரான்ஸ் இராணுவ வட்டா ரமும் மறுத்துள்ளது. ஏற்கனவே அரபாத மரணமடைந்ததாக இஸ்ரேல் இணையத்தளம் செய்தி வெளியிட்டு, சர்ச்சை எழுந்தது. இப்போது மீண்டும் சர்ச்சை கிளம்பி இருக்கிறது. அரபாத் திற்கு மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டதாகவும், அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் அவர் இறந்து விட்டதாகவும் மற்றொரு பஸ்தீன அதிகாரிகள் வட்டாரம் கூறியது.

இப்படிப்பட்ட முரண்பட்ட தக வல்களால் அரபாத் உயிரோடு இருக்கிறாரா? அல்லது மரணம டைந்துவிட்டாரா? என்பது குழப்ப மாகவே உள்ளது. (ற)



ஜப்பான் விமானப் படையின் ஆண்டு விழாவையொட்டி, டோக்கியோவில் உள்ள பயிற்சி மைதானத்தில் விமானப் படையின் ஜெட் விமானங்கள் ஒருங்கிணைந்து பறந்து சாகசம் செய்த காட்சி.

## அகதிகளை கைதுசெய்ய வேண்டாமென மலேசியாவுக்கு ஐ.நா.வேண்டுகோள்

மலேசியாவில் அகதிகளாக தஞ் சம் புகுந்தவர்களை கைது செய்ய வேணடாம் என்று அந்நாட்டு அரசை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

மலேசியாவில் 28 இலட்சம் வெளி நாட்டினர் அகதிகளாக வசித்து வருகின்றனர். இவர்களில் 10ஆயி ரம் பேர் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள். இதேபோல் மியான் மர் ரோஹின்ஜியா முஸ்லிம் சிறு பான்மையினர் 10 ஆயிரம்பேரும் மலேசியாவில் வசித்து வருகின் றனர்.

மியான்மரில் உள்நாட்டு போர் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் கள மலேசியாவுக்கு இடம்பெயர்ந் தனர். இந்நிலையில் வெளிநாட் டில் இருந்து சட்டவிரோதமாக மலேசியாவில் குடியேறியவர்கள் மீது மலேசிய அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

மலேசியாவில 12 இலட்சம் வெளி நாட்டினர் இருப்பதால் அவர்களைக் கண்டுபிடித்து வெளியேற்றும் நட வடிக்கையை அரசு துவக்கியுள் ளது. விசா இல்லாமல் தங்கியி ருப்பவர்களைக்கண்டு பிடித்து மலேசிய அரசு கைதுசெய்து வரு கிறது.

மலேசிய அரசின் இந்த நடவ டிக்கையின் போது அகதிகளும் சிக்கிக்கொண்டனர். இவர்களும் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். இதனையடுத்து அகதிகளைக் கைதுசெய்ய வேண்டாம என்று மலேசிய அரசை அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிக ராலயம் வலியுறுத்தியுள்ளது. (ற)

## நெதர்லாந்து ராணியுடன் மன்மோகன் சந்திப்பு

இந்தியா-ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாட்டில் கலந்துகொள் வதறகாக நெதர்லாந்து சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் அந்நாட் டில் ராணி டீட்ரிக்சை சந்தித்துப் பேச்சு நடந்தினார்.

ஹூயுஸ் டென்போஸ்ச் அரண மனையில் நடைபெற்ற இச்சந்திப்பு ஒரு மரியாதை நிமித்தமான சந் திப்பு என்று அறிவிக்கப்பட்டுள் ளது. இந்தச் சந்திப்பின்போது இந்தியா-நெதர்லாந்து நாடுகளுக்கு இடையேயான பழைய நட்புறவுகள் குறித்தும் இரு தலைவர்களும் நினைவு கூர்ந்தனர். (ற)

## சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால் கடலில் இயற்கை சீற்றங்கள் ஏற்படும்

### சேது சமுத்திரத்திட்ட எதிர்ப்புக்குழ அபாய அறிவிப்பு

சேது சமுத்திர திட்டம் நிறை வேறினால் கடலில் புயல், சூறா வளி, கடல் கொந்தளிப்பு போன்ற இயற்கை சீறறங்கள் ஏற்பட்டு கடல் நீர் நிலப்பகுதிக்குள் புகும் அபா யம் ஏற்படும் என சேது கால்வாய் திட்ட எதிர்ப்புக் குழுவினர் எச்ச ரித்துள்ளனர்.

மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு சேதுக் கால்வாய்த் திட்டத்தினைச் செயல்படுத்துவ தில் மிகுந்த ஆர்வம்காட்டி வரு கிறது. ஆனால் இத்திட்டத்தினை நிறைவேற்றக்கூடாது என்று எதிர்ப்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் சார்பில் தூத் துக்குடியில் இருந்து நாகப்பட்டினம் வரை உள்ள கடலோரப் பகுதியில் சேதுத் திட்டக் கால்வாய் நிறை வேற்றப்பட்டால் ஏற்படும் பாதிப்பு குறித்து மக்களுக்கு விளக்க பிர சாரப் பயணம் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இப பிரசார பயணத்தைத் தூத் துக்குடி பழைய துறைமுகம் அரு கில் எதிர்ப்பு இயக்க அமைப்பாளா தமிழ்மாறன் தலைமையில், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல் கலைக்கழக சுற்று சூழல் அறிவி யல்துறை பேராசிரியர் அருணாச் சலம் துவக்கிவைத்தார். மேலும் திட்டம்குறித்து அவர் கூறியதா வது,

சேது சமுத்திர கால்வாய் தொடங் கப்பட்டு செயல்படுத்தப்பட்டால் இயற்கை வளம் பாதிக்கப்படும். திட்டத்தின் மூலம் 2 ஆயிரம் கோடி வருவாய் கிடைக்கும் என்று கூறும் மத்திய அரசு ரூ.20 ஆயிரம் கோடி நஷ்டம் ஏற்படுவது குறித்து எடுத்துக் கூறவில்லை.

திட்டம் நிறைவேற்றப்படும் கடல் பகுதியில் உள்ள பவள பாறை கள் அழிந்து இதனால் கடலில் அமைநதுள்ள இயற்கை பாதுகாப் புக்கு குந்தகம் ஏற்படும். இதனால் கடலில் புயல், சூறாவளி ஏற்பட்டு கடல் கொந்தளிப்பினால் நிலப் பகுதியில் கடல்நீா புகும் அபாயம் ஏற்படும். குறிப்பாக திருச்செந்தூர் நகருக்குள் கடல் நீர் புகுந்துவிடும் என்றார். (ப)



மும்பையில் நடந்த மாடல் அழகிகளுக்கான விருதுவழங்கும் விழாவில், மிகச் சிறந்த மாடல் அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஐஸ்வர்யா ராய் விருது பெற் றார். நிகழ்ச்சியில் விருது பெற்ற மகிழ்ச்சியை ரசிகர்களிடம் தெரிவிக்கும் காட்சி.

## அல்—கெய்டா தீவிரவாதிகள் மீது பாக்.இராணுவத்தினர் தாக்குதல்

(இஸ்லாமபாத்)

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் அல்கெய்டா தீவிரவாதி கள் மீது பாகிஸ்தான் இராணு வத்தினர் நேற்று முன்தினம் மேற் கொண்ட தாக்குதலில் 6 தீவிர வாதிகள் பலியாகினர். தீவிரவாதி களின் பதில் தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியாகினர்.

இதுகுறித்து பாகிஸ்தான் உள் நாட்டு மக்கள் தொடர்பாளர். மேஜர் ஜெனரல் சௌக்கத் சுல்தான் நிரு பர்களிடம் கூறியதாவது,

பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தானுகக இடையிலான எல்லைப் பகுதிகளான வரிஜிஸ்தான் மற்றும் வானா ஆகிய இடங்களில் அல்-கெய்டா தீவிர வாதிகள் அதிகளவில் மறைந் துள்ளனர். அவர்கள் மீது பாகிஸ் தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினா. ஹெலிகொப்டர் உதவி யுடன் தீவிரவாதிகள் மீது குண்டு மழை பொழிந்தனர். இந்த அதி ரடித் தாக்குதலில் 6 அல்-கெய்டா தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான் இராணுவத்தினர் மீது அல்-கெய்டா தீவிரவாதிக ளும் பதில் தாக்குதல் நடத்தினா. இதில் இரண்டு பாகிஸ்தான் இரா ணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றார்.

பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்தத் தாக்குதலுக்கு அமெரிக் காவின் தூண்டுதல்தான் காரண மென தலிபான்கள் தரப்பில் குற் றம்சாட்டப்பட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவு இணை அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் நேற்று முன் தினம் பாகிஸ்தான் சென்றுள்ள சூழ்நிலையில, இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. புஷ் மீண்டும் அமெ ரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு பிறகு முதன் முதலாக ஆர்மிடேஜ் பாகிஸ்தானுக்கு விஜ யம் செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ற)

## பலுஜாவில் அமெ.படை தாக்குதல் சதாம் ஆதரவுப் படையினர் 45பேர் பலி

(பலுஜா)

ஈராக்கில் பலுஜா நகரில் நடை பெற்றுவரும் மோதலில் இதுவரை 50பேர் கொல்லபபட்டுள்ளனா. ஈராக் கில் தங்கியுள்ள வெளிநாட்டுப் படைகளை வெளியேறக்கோரி சதாம் ஹூசைன் ஆதரவு கெரில் லாப்படையினர் நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தினசரி கார்க்குண்டுத்தாக்கு தல்களை நடத்திவரும் இந்தக் கெரில்லாக்களை ஒடுக்க ஈராக் அரசு அவசரகால நிலையை பிர கடனப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து கெரில்லாக்கள் அதி கம் பதுங்கியுள்ள பலுஜா, சமாரா மற்றும் பகுபா நகரங்களை ஈராக் இராணுவமும், அமெரிக்கப்படை களும் சுற்றிவளைத்துத் தாக்கு தல் நடத்தி வருகின்றன.


சுமார் 5 ஆயிரத்துக்கும அதிக மான கெரில்லாக்கள் வெளிநாட்டு கூலிபடையினருடன் இணைந்து இந் தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்து வருகின்றனர். அமெரிக்க போர் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் மேற்படி நகரங்களை தவிடுபொடி யாக்கி வருகின்றன. இந்தத் தாக்கு தலில் இதுவரை 50க்கும் மேற்பட் டவர்கள் பலியாகியுள்ளனர்.


இதேவேளை, அமெரிக்கக் கடற் படை வீரர்கள் இரண்டு பேரும் இந்த சண்டையில் உயிரிழந்துள்ளனா. (ற)

# தமிழீழ சட்டக் கல்லூரி திறப்பு விழாவிலிருந்து






















படங்கள்: பவன்

# தீபாவளி சிறப்பு மலர்





## சுகன்ஜா நகை அகம்



## Sukanya Nakai Akam

**தங்கப்பவுண் நகை வியாபாரம்**

தரம் குன்றா 22 கரட் தங்கநகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

177/3,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 177/3,Kasthuriar Road,
Jaffna.

உரிமையாளர் ந.மதியழகன் (எழுவைதீவு)

## Shanjaeya Foodland

*All kinds of Veg. & Non Veg. foods*
*Friday only Vegetarian*
*Catering Facilities Available*

Tel No: 021 222 6600 414,Hospital Road.
0777 -144254 Jaffna.

தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு வெளிநாட்டு அழைப்புகளுக்கு 1 நிமிடம் இலவசம்.



## விஜய் தொலைத் தொடர்பகம்

பிரதான வீதி, பெருங்காடு -புங்குடுதீவு -01

| உள்நாடு | வெளிநாடு |
|---|---|
| 0712 - 399 113 | 0094 712 -399 113 |
| 0712 - 399 204 | 0094 712 -399 204 |

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களையும் இன்ரநெற்றிலும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் உங்களுக்கான அழைப்பை உடனடியாக உங்கள் இல்லம் தேடி அறிவிக்கப்படும்.
அத்துடன் இரவு பகல் சேவை.

உரிமையாளர் S.சிவகுமார்



## முத்துமாரி அம்பாள் தொலைத்தொடர்பு நிலையம்

**பிரதான வீதி, புங்குடுதீவு-2**

உள்நாடு, வெளிநாடு இன்ரநெற் தொடர்புகளைக் குறைந்த கட்டணத்துடன் எமது நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். தகவல்கள் உடனுக்குடன் விநியோகிக்கப்படும்.

உரிமையாளர் S.கரன்



ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ
அசல் 22 கரட் தங்கநகைகளை கைதேர்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களால் மனதைக் கவர்ந்த டிசைன்களில் செய்து கொள்ள இன்றே நாடுகள்....



## பிரணகா நகைத் தொழிலகம்

68/A,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். ஊர்காவற்றுறை

மனம் கவரும் நகைகள் உறுதியுடனும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள உகந்த இடம்



## நதிமா நகை மாடம்

2,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

தொ.பே. 222 3479

கவுசன் நகைமாடம்
129,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நித்யா நகைமாடம்
99,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

☞ புத்தம் புதிய துவிச்சக்கரவண்டிகள், ☞ T.V, டெக் வகைகள் ☞ றேடியோ வகைகள்
☞ அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் ☞ அன்ரனா வகைகள் போன்றவற்றை

**மொத்தமாகவும் சில்லறையாகவும் யாழ்.நகரில் பெற்றுக்கொள்ள**

## இ.சி.பேரம்பலம் சகி நிறுவனம்

## E.S.PERAMPALAM AND CO

(PEPSI, MIRINDA, 7UP போன்றவற்றிற்கான ஏக விநியோகஸ்தர்கள்)

T.P : 021 222 2988, 021 222 3096

இல.50,52,54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Fax: 021 222 2368

# தீபாவளி சிறப்பு மலர்


## SOLAX OPTICAL & DENTAL WORK
### சொலெக்ஸ் பல், மூக்குக் கண்ணாடியகம்

*மிகத்துல்லியமாக உங்கள் கண்களைப் பரிசோதித்து றிம் லெஸ் (Rim less) கண்ணாடிகளை அன்றையதினமே பெற்றுக்கொள்ளவும்,
*நவீனவகையிலான சண் கிளாஸ் வகைகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும்,
*பல் சம்பந்தமான சகல ஆலோசனைகளையும் பெறவும், சங்குப்பற்களை மிகக் கவர்ச்சிகரமாகக் கட்டிக்கொள்ளவும்,
*மிதப்புப் பற்களுக்கு இலகுமுறையில் கிளிப் பொருத்திச் சீர்செய்துகொள்ளவும்,



யாழ்.நகரில் சிறந்த இடம்



### சொலெக்ஸ் பல், மூக்குக் கண்ணாடியகம்

இல: 516, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P. 222 7631

எமது சொலெக்ஸ் பல், மூக்குக் கண்ணாடியகம் யாழ்.நகரில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதியுடன் ஒருவருடம் பூர்த்தியாவதையொட்டி 15% விஷேட கழிவு வழங்கப்படும்.

## G.M.K COMMUNICATION

❄ உள்ளூர் அழைப்புக்கள்
❄ இன்ரநெற் மூலமான சர்வதேச அழைப்புக்கள் (நிமிடத்திற்கு 8/=)
❄ ஃபக்ஸ்
❄ கொம்பியூட்டர் பிறிண்டிங்
❄ கொம்பியூட்டர் ரைப்பிங்
❄ கையடக்கத் தொலைபேசிக்குரிய Kit Cards
❄ கொம்பியூட்டர் திருத்த வேலைகள்
❄ யாழ் - கொழும்பு விமானப் பதிவு மற்றும் வான் ஆசனப்பதிவு





என்பனவற்றை நியாயமான கட்டணத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த இடம்

### G.M.K COMMUNICATION

இல.302, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P - 021 - 222 3760
- 021 - 4591194

## அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

☼ கட்டடப் பொருட்கள் ☼ பெயின்ற் வகைகள்
போன்றவற்றை நிதானவிலையில் ஓரிடமாகப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



### கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

CALTEX 2T ஒயிலுக்கான வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
T.P.021 - 222 - 2833
இல: 147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## GEETHA JEWELL HOUSE

பெண்மைக்கு மெருகூட்டும்
இளமைக்கு எழிலூட்டும் அசல்
22 கரட் தங்கநகைகளை
எழில்மிகு வடிவில்
செய்து பெற்றிட வாரீர்



### கீதா ஆபரண மாளிகை



(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)

இல.12, நவீன சந்தை, கண்டிவீதி,
சாவகச்சேரி.

தொ.பே. 0777 737336

உரிமையாளர் : - கந்தசாமி ஜீவகாந்தன்

எமது வாடிக்கையாளர்களுக்குத் தீபாவளி வாழ்த்துக்கள்

தொலைத்தொடர்பு, கட்டடப்பொருட்கள் விற்பனை நிலையம்.



### அனஸ் வீடியோ

தேவைக்கு எங்களை நாடுங்கள்
சங்கானை T.P :- 021 222 5451

அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

### YOGI BEAUTY PARLOUR

(Academy of Beauty Culture & Hair Dressing)

### HOME SCIENCE ACADEMY



இல: 75, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். T.P: 222 2796

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



### நாதன் சகோதரர்

பல்பொருள் வாணிபம்

கே.கே.எஸ்.வீதி, இணுவில். T.P: 222 7515

# தீபாவளி சிறப்பு மலர்

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
சிறியோர் முதல் பெரியோர் வரை மனங் கவர் ஆடைகளை எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய ஒரே இடம்



அபிராமி புடவையகம்
பிரதான வீதி, சங்கானை.

தீபாவளி நல்வாழ்த்துக்கள்
பூங்கன்றுகள், கனிமரக் கன்றுகள், குறோட்டன் கள், பூச்சாடி வகைகள், கோழித்தீன் வகை கள், புறோயிலர் கல்பேட் விற்பனையாளர்கள்
நாகம்ஸ் பாம்
வட்டு இந்துக் கல்லூரி அருகாமை
வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை.

தீபாவளி நல்வாழ்த்துக்கள்
கிருஸ்ணா தொலைத்தொடர்பகம்



T.P: 077 3086784, 021 222 5890, 060 223154.
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

தீபத் திருநாளாம் த்பாவளி நன்நாளில் வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
அருள் மோட்டோர்ஸ் வேக்கஸ் அன் சேவிஸ் ரேசன்
வடக்கம்பரை, தொல்புரம், சுழிபுரம்.



தீபாவளி நல்வாழ்த்துக்கள்
கரன் ஸ்ரோர்ஸ்
சீமெந்து, பால்மா வகைகள், அபிடேகப் பொருட்கள், குளிர்பான வகைகள், கோழித்தீன்கள், யூரியா.
T.P:077 3039462
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.



அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
R.S.T
No:1 றோஸ்நாடு
பாலன் அரிசி ஆலை
BALAN RICE MILL
MAVADI-VADDUKODDAI
மாவடிச்சந்தி - வட்டுக்கோட்டை.
T.P:0602212624

சச்சியா இரும்பகம்
மின்சார உபகரணங்கள், கட்டடப்பொருட்கள், நிறப்பூச்சுக்கள், SLON குழாய்கள், சீமெந்து வகைகளை பெற்றுக்கொள்ளவும் உங்கள் இல்லம் கொண்டுவர வசதியும் செய்து தரப்படும்.
தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை.

## தீபாவளித் திருவிழா

தீபாவளித் திருவிழா
தீபங்கள் ஏற்றட்டும்
தீபாவளிப் பெருவிழா
திரைகள் அகற்றட்டும்

வெற்றியின் தனிவிழா
வேதனைகள் நீக்கட்டும்

பக்தியின் ஒளிவிழா
பகைமைகள் போக்கட்டும்
வாழ்வின் வசந்தவிழா
வைரங்கள் பதிக்கட்டும்
ஏழ்மையின் எழில்விழா
அமைதியில் பூக்கட்டும்

-நல்லை அமிழ்தன்

## தீபாவளித் திருநாள்

தீந்தமிழர் வாழ்வினிக்கும்
தீபாவளி நாளில்
காந்தமெனக் கவர்ந்திழுக்கும்
கடமைதனைப் பிடிப்போம்!

இடர்களையும் இலக்கணத்தை
இதமாகவே பிடித்து
திடமுடனே தீமைகளைத்
தீய்த்துலகை வாழவைப்போம்!

செய்யும் தொழில்களெலாம்
சிறப்புற்று ஓங்குதற்கு
மெய்வருத்தம் பாராது
மேதினியிலே உழைப்போம்!

கண்ணீர்க் கடல் நீந்தும்
கன்னித் தமிழணங்கை
மண்ணில் மகிழவைக்க
மாவீரம் தனை வளர்ப்போம்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

# தீபாவளி சிறப்பு மலர்


வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

சாவகச்சேரி நகரில்
இன்னும் ஓர் சேவையில்





அம்பாள் பார்மஸி
அன்ட் குறோசறி

இல:1, நவீன சந்தை,
சாவகச்சேரி.

அனைத்து கையடக்கத் தொலைபேசிகளுக்குமான சிம் காட் (sim) (இணைப்புக்கள்) மற்றும் Kit காட் மள் நிரப்புஅட்டைகளை பெற்றுக்கொள்ளவும்

AMBAL PHARMACY & GROCERY

T.P Nos:-
060 2213313, 0777 238314,
077 6103210

No-1, NEW MARKET,
CHAVAKACHCHERI.

(வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவுகளுடன்)



வடபகுதியில் அரச அங்கீகாரம் பெற்ற விளம்பர முகவர்

ஜோ.எகட்டன்
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

உங்கள் விளம்பரங்கள் எதுவானாலும்,
இலங்கையில் எந்த அலைவரிசை, பத்திரிகை,
தொலைக்காட்சியில் விளம்பரம் செய்வதற்கும்
ஜோ.எகட்டன்
செனித் மார்க்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம்ஸ்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

தொலைபேசி / தொலைநகல் } 021 222 7227

தொடர்புகளுக்கு
நேரில் விஜயம்
செய்யுங்கள்.

காரியாலய நேரம்: 10.30 - 3.30வரை

புதுயுகத்தின் புது உருவம் செனித்



அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
சகலவிதமான வீடியோ, ஓடியோ, றெக்கோடிங் சேவை
மற்றும் வாடகை வான் சேவை ஆகியவற்றுக்கு
நாடவேண்டிய சிறந்த இடம்



வித்துயன் எலக்ரோனிக் அன்ட்
வீடியோ ஓடியோ சென்ரர்



T.P. 0777 - 111348
021 - 4590638

யாழ். வீதி, ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.



அனைத்துவகைப் புடவைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள கைராசியான ஸ்தாபனம்

சர்வதேச கடன்
அட்டைகள் ஏற்கப்படும்



சீமாட்டி



புடவைக்கடல்

கிளைகள்- மங்கை சில்க்ஸ்
மொடேர்ன் மாக்கற்
இல.15 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இல: 122, மன்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 222 2196
Fax. 222 2102



- இலங்கையில் அச்சிட்ட அனைத்துப் புத்தகங்கள்
- இந்தியாவில் வெளியான அனைத்துப் புத்தகங்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- வாழ்த்து மடல்கள்
- 2005ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள் மற்றும் டயறிகள்



அனைத்தையும் நியாயமான விலையில் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடங்கள்

மகிமிலன் புத்தகசாலை
இல.03 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 - 2422



சிறிகாந்தா புத்தகசாலை
இல.165 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் எமது தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

அன்றும்! இன்றும்!! என்றும்!!!

இதமான புகை இன்பத்திற்கு

ஆர்.வி.ஜி. பீடிகள்





இல: 58, நல்லூர் குறுக்குவீதி,
யாழ்ப்பாணம். T.P: 021-222 6806



தீபாவளி வாழ்த்துக்கள்!
தீப ஒளிபரப்பும் இத்தீபாவளித் திருநாளில் பாவம் பொடிபட பார்தனில் மக்கள் சமாதானமாக அவர் தம் மனைகளில் நிம்மதியாய் வாழ்ந்திட, நிதம் ஒளி ஏற்றிட வாழ்த்துகிறோம் எம் அகம் மகிழ!

நல்லெண்ணெய் விற்பனையில் ஓர் இராஜமுத்திரை

V.S.P

கலப்படம் கனவிலும் இல்லை. அதனால் வாடிக்கையாளர் மனதில் நிலைப்படமாகிவிட்ட பெயர்
V.S.P லஞ்ச் ஒயில் பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 2785
கொழும்பில் எமது முகவராக: மயூரா கொமினிக்கேசன்
No:-36B, பரகும்பா பிளேஸ், கொழும்பு-06. T.P.0112366226-0115556308-0115556307



ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்து பால்மா
வகைகள் என்பவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ள
R.V.G மெடிக்கல்ஸ்
இல: 504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 021-222 2129

# தீபாவளி சிறப்பு மலர்


அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
பனைவளம் பெருக்கி மனைவளம் சிறந்து
மகிழ்வுடன் வாழ்வீர்!

**வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)**

மானிப்பாய். T.P. 021 222 3465



உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட்
தங்க, வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்



**வி.எம்.கே. ஜுவல்லர்ஸ்**
(தங்கப் பவுண் நகை வியாபாரம்)

இல: 105, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
T.P. 222 7339

கிளை ஸ்தாபனம்
கண்டி வீதி,
சாவகச்சேரி.



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது உளம் கனிந்த தீபாவளி
வாழ்த்துக்கள்
இதோ
171, ஸ்ரான்லி வீதியில்
உங்களது நன்மதிப்புப் பெற்ற பிரீடம் எல்.எம்.எல்.ஸ்கூட்டர் மோட்டார் சயிக்கிள்,
விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள புதிய நிறுவனம்





**எஸ்.பீ.என். மோட்டர்ஸ்**

**S.P.N. MOTORS**

171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 7144


## உலகாளும் ஒளி



ஒளியது உலகை யாள
உண்மைகள் உயர்ந்து மேவ
பழியது பதறி யோடும்
பாங்கு கொள் தீப நாளாம்!

பாங்குகொள் தீபநாளின்
பக்குவம் பார்க்கும் தோறும்
தீங்கிலா அசுரன் அன்னை
திகழ்கிறாள் என்றும் உன்னில்!

தருமத்தின் தகைமை தனை
தரணி தனுக் கேயுணர்த்தும்
மருமத்தின் மகத் துவமே
மாதீப வளி யாகும்!

விளக்கினை ஏற்றி வாழ்வை
விளங்கிட வைக்கும் நாளில்
வளம் பல பெற்று வையம்
வனப்புடன் வாழக் காண்போம்.

*தென் நல்லை கு.பகீரதன்.*


அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**வரதன் லேணேர்ஸ்**

**VARATHAN LEARNERS**
**Driving Licence Learning School - 'A' Grade**
**Govt. Approved (L) No: D.S. 365**

- யாழ்.வன்னி மாவட்டங்களில் சிறந்த சாரதிகளை உருவாக்கிய வரதன் சாரதிப் பயிற்சிப் பாடசாலை தனது ஓராண்டைப் பூர்த்திசெய்துள்ளது.
- யாழ்.மாவட்டத்திலேயே பயிற்சிகள் வழங்கி ஒருமாதத்தில் லைசென்ஸ் பெற ஒழுங்குகள் செய்யப்படும்.
- எமது நிறுவனம் அரச அங்கீகாரம் பெற்ற (பதிவு எண் D.S. 365) 'A' Grade பயிற்சிப் பாடசாலையாகும்.
- பெண்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் நலன்கருதி பிரத்தியேக நேரங்களில் பயிற்சி வழங்கப்படும்.
- குடாநாட்டு மக்களின் நலன், வசதி கருதி யாழ்.நகர், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மானிப்பாய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் கிளைகள் அமைக்கப்பட்டு அந்தந்த இடங்களில் சாரதிப் பயிற்சி வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நல்லொழுக்க பண்பான சாரதியாவதற்கு இன்றே நாடுங்கள்!

*வரதன் லேணேர்ஸ்*

நவீன சந்தை(மேல்மாடி)
சாவகச்சேரி.

T.P. 0777 110868

*133, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*


## தீபத் திருநாளே வருக வருகவே!

ஆண்டாண்டு காலமாய் நாம் தமிழர் அனுபவிக்கும்
துன்பத்தை நீக்கிப் புதுவாழ்வு தருவதற்கும்
நீண்டநாள் யுத்தம் நின்று சமாதானம்
நிரந்தரமாக நின்று நிலைப்பதற்கும்
வேண்டி அழைக்கிறோம் விடிவின் ஒளிகீற்றை
ஈய்ந்து எமைக்காக்க வருவாய் திருநாளே!

மதுரகவி


**மதி கலர்ஸ்**

ஸ்கிறீன ஒ(f)வ்செற் பிறிண்டர்ஸ்
சகலவிதமான பிறிண்டிங் வேலைகளுக்கும், லெமினேற்றிங்
செய்துகொள்ளவும்

**MATHI CLOURS**

15/2B, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்

Tele: 077 7222524


## தீபத் திருநாள்

இன்பங்கள் பொங்கிவந்து இன்னல்கள் இடிந்து வீழும்
துன்பங்கள் சரிந்து மாளும் சுதந்திரம் மலர்ந்து வீசும்
நன்மைகள் பொங்கி நாளும் நயம் செய்த நரகாசுரன் மேல்
நல்வாழ்த்துக்கூறுமெங்கள் தீபத்திருநாள் வாழ்க!

மு.சுகந்தினி,
அச்சுவேலி.

# தீபாவளி சிறப்பு மலர்





## சிறப்பு அம்சங்கள்

- ஒரு தங்கப்பவுணுக்கு ஆகக்கூடிய தொகை (24 கரட் தங்கப்பவுணுக்கு / தங்கநாணயத்துக்கு).
- குறைந்த வட்டியில்.
- உபசரிப்புடன் கூடிய உடனடிச் சேவை.
- கொடுக்கல் வாங்கல்களின் இரகசியத்தன்மை கொடுக்கல் வாங்கல் குறிப்பிட்ட அறையொன்றில் இரகசியமாக மேற்கொள்ளப்படும்.
- அதிகூடிய பாதுகாப்பும் நம்பிக்கையும்.
- ஏற்றுக்கொள்ளத்தக்க தரமதிப்பீடு, தங்க ஆபரணத்தின் தரத்தை பரீட்சித்தலும், நிர்ணயித்தலும்.
- தங்கநகைகளை அடைவுவைக்கும்போது ரூ 30/- போன்ற ஒரு சிறுதொகையுடன் கணக்கொன்றை ஆரம்பிக்கவும். பணம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் குறித்த கணக்கில் சேமிப்பை மேற்கொண்டு அடைவை மீட்டுக்கொள்வதற்கான வாய்ப்பு.
- அவ்வாறே கணக்கில் சேமிக்கும் தொகைக்கு வட்டியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு.
- தொடர்ந்தும் தங்கள் விருப்பத்திற்கேற்ப வங்கிக் கணக்கை நடைமுறைப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம்.
- வியாபார நடவடிக்கைகளுக்காகக் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வாய்ப்பு.

BOC
இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

பலசரக்குப் பொருட்கள், மிக்சர் தயாரிப்பிற்கான பொருட்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

### ஜெகன் களஞ்சியம்

இல.285,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 -222 5035

✲ இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து, நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
✲ இழந்த பற்களுக்கு நிகராக சங்குப்பற்களைக் கட்டிக் கொள்ளவும்,
✲ உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்,
✲ விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறே லென்ஸ் என்பவற்றை பெற்றுக்கொள்ளவும்,
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

### ஸ்ரீ கணேஷ்



கிளை: இல 91, K.K.S.Road, Kokuvil,
கிளை: இல 80, K.K.S.Road, Chunnakam.

மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும், கட்டுப்பற்களைச் சுத்தம்செய்யும் மாத்திரை விற்பனைக்கு உண்டு.
566, 564 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 222 2486

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்



### அம்பாள் ஸ்ரோர்ஸ் அன் ரெக்ஸ்ரைல்ஸ் அன் திருமண பந்தல் சேவை

எம்மிடம் வலம்புரி, உதயன், நமது ஈழநாடு, வீரகேசரி, தினக்குரல், மித்திரன், சுடரொளி, சிரித்திரன் மாத சஞ்சிகை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்–கை.ஸ்ரீஸ்காந்தன்
1-ம் வட்டாரம்
புங்குடுதீவு.

மக்கள் வங்கி
புதிதாக அறிமுகப்படுத்தும்
‘வெளிநாட்டு பண அதிஷ்ட சீட்டிழுப்பு’

வெளிநாடுகளில் வசிக்கும் அன்புக்குரியவர்கள், மக்கள் வங்கியினூடாக உங்களுக்கு பணத்தினை அனுப்புவதன் மூலம், பல இலட்சங்களை வெல்லும் அதிஷ்டசாலிகளில் நீங்களும் ஒருவர் ஆகுகிறீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1வது பரிசு | - | ரூபா | 2.5மில்லியன் |
| 2வது பரிசு | - | ரூபா | 1.0மில்லியன் |
| 3வது பரிசு | - | ரூபா | 500,000/- |

ஒவ்வொன்றும் ரூபா 50,000/- பெறுமதியான பரிசுகள் 47

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள மக்கள் வங்கியை நாடவும்

### மக்கள் மனம் அறிந்த வங்கி
### மக்கள் வங்கி

உங்களுக்காக..................நாட்டிற்காக

சகலவிதமான அச்சுவேலைகளையும் கணனி, ஓவ்செற், ஸ்கிறீன் பிறிண்டிங் மூலம் அமைத்துத்தர
நாடவேண்டிய ஒரே இடம்

### தமிழ்ப் பூங்கா அச்சகம்



Thamil Poonka Printers
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
தொ.பேசி - 021 2264014

தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

### சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்

வலி.மேற்கு பிரதேசத்துக்கு அயோடின் கலந்த ஆணையிறவு உப்பு விற்பனைக்கு ஏகவிநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளோம்.
எம்மிடம் உப்பை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்.

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- காலத்தால் அழியாத
- கற்பனைக்கு எட்டாத
- எழில் குன்றாத அற்புதப் படைப்புகள்
- பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும் அசல் ரகங்கள். குறிப்பிட்ட தவணையில் தரமாகவும் நியாயமாகவும் பெற்றிட நாடுகள்.



### சாரங்கா நகைமாடம்

இல.157/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 - 2480
021 -222 - 6972

சாரங்கன் நகைமாடம்
இல.45,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 - 6059

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் பெயர் விபரம் - கார்த்திகை 2004

(நேற்றைய தொடர்ச்சி)

## பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

01) கி/ப/124 திரு.சின்னையா கந்தையா
02) கி/ப/184 திரு.சின்னத்தம்பி செல்லையா
03) கி/ப/217 திரு.தம்பையா செல்லத்துரை
04) கி/ப/256 திரு.முத்தையா குழந்தைவேலு
05) கி/ப/299 திரு.செல்லப்பா சேனாதிராசா
06) கி/ப/347 திருமதி.தங்கம்மா அப்பாப்பிள்ளை
07) கி/ப/379 திரு.வைரமுத்து கணபதிப்பிள்ளை
08) கி/ப/387 திரு.சின்னத்துரை பாலசுந்தரம்
09) கி/ப/639 திரு.கந்தையா காசிப்பிள்ளை
10) கி/ப/701 திரு.சின்னர் .கந்தையா
11) கி/ப/805 திரு.சின்னக்குட்டி இராசையா
12) கி/ப/860 திரு.கார்த்திகேசு வேலாயுதம்பிள்ளை
13) கி/ப/964 திரு.இரப்பியல் எலியாஸ்

## கிளிநொச்சி மாவட்டம

01) வ/கி/1 திரு.பிள்ளையினார் மாணிக்கம்
02) வ/கி/2 திரு.தம்பிப்பிள்ளை பாலசிங்கம்
03) வ/கி/5 திரு.ஆறுமுகம் லோகநாதன்
04) வ/கி/7 திரு.சண்முகம் செல்லையாபிள்ளை
05) வ/கி/12 திரு.தம்பிராசா கனகசுந்தரம்
06) வ/கி/25 திரு.சின்னத்தம்பி கோபாலன்
07)வ/கி/35 திரு.கணபதிப்பிள்ளை இராசரத்தினம்
08) வ/கி/39 திரு.நமசிவாயம் மகாலிங்கம்
09) வ/கி/40 திரு.நமசிவாயம் வேலாயுதபிள்ளை
10) வ/கி/54 திருமதி.நாகரத்தினம் சுப்பையா
11) வ/கி/55 திரு.சிற்றம்பலம் பாலசிங்கம்
12) வ/கி/59 திரு.செல்லையா சோமசுந்தரம்
13) வ/கி/62 திரு.கிருஷ்ணர் தில்லைநாதன்
14) வ/கி/68 திரு.சுப்பிரமணியம் செல்லத்துரை
15) வ/கி/77 திரு.வேலுப்பிள்ளை சுவாமிநாதன்
16) வ/கி/81 திரு.சிதம்பரப்பிள்ளை வாரித்தம்பி
17) வ/கி/90 திரு.சின்னக்குட்டி பசுபதி
18) வ/கி/91 திரு.கார்த்திகேசு ஆறுமுகம்
19) வ/கி/96 திருமதி.சின்னப்பிள்ளை சரவணமுத்து
20) வ/கி/99 திரு.தனிநாயகம் கணபதிப்பிள்ளை
21) வ/கி/100 திரு.வைத்திலிங்கம் கதிரவேலு
22) வ/கி/108 திரு.இராசேந்திரம் இராமலிங்கம்
23) வ/கி/110 திரு.நாகலிங்கம் கனகலிங்கம்
24) வ/கி/111 திரு.பரராசசிங்கம் சிவசுப்பிரமணியம்
25) வ/கி/116 திரு.கந்தையா பரமலிங்கம்
26) வ/கி/131 திருமதி.நாகம்மா பொன்னையா
27) வ/கி/142 திரு.பசுபதி இராசையா
28) வ/கி/150 திரு.சின்னத்தம்பி கந்தையா
29) வ/கி/214 திரு.சுப்பிரமணியம் கோபாலபிள்ளை
30) வ/கி/247 திரு.சின்னத்தம்பி ஆறுமுகம்
31) வ/கி/264 திரு.சின்னப்பு நடராசா
32) வ/கி/267 திரு.சின்னர் கணபதிப்பிள்ளை
33) வ/கி/268 திருமதி.கனகம்மா இராமலிங்கம்
34) வ/கி/270 திரு.சின்னத்துரை ஈஸ்வரலிங்கப் பொருமாள்
35) வ/கி/280 திரு.விஸ்வலிங்கம் ஏகாம்பரம்
36) வ/கி/289 திரு.செல்லையா சதாசிவம்
37) வ/கி/307 திரு.சின்னத்தம்பி சேனாதிராசா
38)) வ/கி/330 திரு.தம்பிஜயா திருநாமசுந்தரம்
39) வ/கி/355 திரு.ஆறுமுகம் கனகசபை
40) வ/கி/357 திருமதி.தெய்வானை ஏரம்பு
41) வ/கி/369 திரு.பரனிருபசிங்கம் கனகரத்தினம்
42) வ/கி/418 திரு.முத்துக்குமாரு நாகையா
43) வ/கி/441 திரு.வேலுப்பிள்ளை இரத்தினம்
44) வ/கி/444 திரு.அண்ணாமலை சின்னையா
45) வ/கி/446 திரு.முருகேசு இராசையா
46) வ/கி/451 திரு.வல்லிபுரம் கதிரமலைநாதன்
47) வ/கி/455 திரு.சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை
48) வ/கி/470 திரு.கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்
49) வ/கி/474 திரு.மாணிக்கம் இராமநாதன்
50) வ/கி/480 திரு.இராமசாமி சுப்பையா
51) வ/கி/489 திரு.சங்கரப்பிள்ளை வைத்திலிங்கம்
52) வ/கி/490 திரு.கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்
53) வ/கி/501 திரு.வேலாயுதம் கந்தசாமி
54) வ/கி/508 திரு.நாகநாதர் விசுவலிங்கம்
55) வ/கி/519 திரு.ஞானப்பிரகாசம் பெனடிக்ற்
56) வ/கி/529 திரு.சுப்பிரமணியம் இரத்தினசிங்கம
57) வ/கி/535 திருமதி.தெய்வானைப்பிள்ளை அமரசிங்கம்
58) வ/கி/538 திரு.சின்னத்தம்பி துரைசிங்கம்
59) வ/கி/543 திரு.முத்துத்தம்பி தில்லையம்பலம்
60) வ/கி/559 திருமதி.சொர்ணம்மா தம்பிப்பிள்ளை
61) வ/கி/596 திரு.அருணாசலம் பங்கிராஸ்
62) வ/கி/601 திரு.சின்னையா கந்தையா
63) வ/கி/606 திரு.கணபதிப்பிள்ளை பாலசாமி
64) வ/கி/620 திரு.அருணாசலம் சோமசுந்தரம்
65) வ/கி/623 திருமதி.நாகம்மா மரியதாஸ்
66) வ/கி/625 திரு. ஜயாத்துரை தனபாலசுந்தரம்
67) வ/கி/639 திருமதி. தர்மசோதி பொன்னுத்துரை
68) வ/கி/640திரு. இராமலிங்கம் மாணிக்கம்
69) வ/கி/642திரு. கிருஸ்ணபிள்ளை வீரசிங்கம்
70) வ/கி/650திரு. வல்லிபுரம் நவரத்தினம்
71) வ/கி/658திரு. சின்னத்தம்பி நவரெத்தினம்
72) வ/கி/661திரு. செல்லப்பா வீரசிங்கம்
73) வ/கி/664திரு. சின்னப்பு முத்துக்குமாரு
74) வ/கி/667திருமதி. இராசமணி வல்லிபுரம்.
75) வ/கி/683திரு. இராமநாதர் பரமலிங்கம்
76) வ/கி/684செல்வி. இராசம்மா வல்லிபுரம்
77) வ/கி/716திரு. வெள்ளைச்சாமி செல்லத்துரை
78) வ/கி/730திரு. அப்புப்பிள்ளை யோகநாதன்
79) வ/கி/740திரு. கந்தையா சீனிவாசகம்
80) வ/கி/745திரு. குட்டிப்பிள்ளை நாகலிங்கம்
81) வ/கி/752திரு. சிற்றம்பலம் சிவப்பிரகாசம்
82) வ/கி/767திருமதி. மகேஸ்வரி மதியாபரணம்
83) வ/கி/769திரு. நாகலிங்கம் கந்தையா
84) வ/கி/776திரு. சின்னையா இராசலிங்கம்
85) வ/கி/777திரு. நாகமணி ஆறுமுகம்
86) வ/கி/784திருமதி. சிவயோகம் அப்புத்துரை
87) வ/கி/799திரு. இராசையா மார்க்கண்டு
88) வ/கி/806திரு. அருளம்பலம் குணரத்தினம்
89) வ/கி/814திரு. ஆறுமுகம் சோமசுந்தரம்பிள்ளை
90) வ/கி/818திரு. சிவசம்பு காசிலிங்கம்
91) வ/கி/819திருமதி. பார்வதி ஆறுமுகம்
92) வ/கி/821திரு. விசுவலிங்கம் சின்னத்தம்பி
93) வ/கி/824திரு. கணபதிப்பிள்ளை அருணாசலம்
94) வ/கி/839திரு. நாகலிங்கம் பரராசசேகரம்
95) வ/கி/840திரு. மயில்வாகனம் சண்முகநாதன்
96) வ/கி/855திரு. கதிரவேலு வேலாயுதபிள்ளை
97) வ/கி/856திரு. பெரியதம்பி கணபதிப்பிள்ளை
98) வ/கி/874திரு. கந்தர் பசுபதி
99) வ/கி/877திரு. மாப்பாணபிள்ளை பொன்னுத்துரை
100) வ/கி/880திரு. வேலாயுதம் வைத்திஸ்பரம்
101) வ/கி/884திரு. விசுவலிங்கம் பசுபதி
102) வ/கி/892திருமதி. வள்ளிப்பிள்ளை நடராசா
103) வ/கி/893திருமதி. கனகம்மா பரமசாமி
104) வ/கி/902திருமதி. கனகம்மா நடேசபிள்ளை
105) வ/கி/905திரு. கந்தையா வினாசித்தம்பி
106) வ/கி/911திரு. சுப்பிரமணியம் சண்முகராசா
107) வ/கி/928திருமதி. மீனாட்சி சிவச்சாமி
108) வ/கி/936திரு. மாணிக்கம் செல்வநாயகம்
109) வ/கி/945திருமதி. ஆச்சிப்பிள்ளை பொன்னுத்துரை
110) வ/கி/953திரு. வெள்ளையன் இளையதம்பி
111) வ/கி/955திரு. ஐயம்பிள்ளை ஐயாத்துரை
112) வ/கி/963திரு. குட்டிப்பிள்ளை தருமலிங்கம்
113) வ/கி/979திரு. செல்லத்துரை நாகபிள்ளை
114) வ/கி/991திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு
115) வ/கி/995திரு. இராமுப்பிள்ளை தில்லையம்பலம்
116) வ/கி/1009திரு. விசுவலிங்கம் தில்லையம்பலம்
117) வ/கி/1026திருமதி. பொன்னம்மா சின்னத்துரை
118) வ/கி/1034திரு. முத்தையா தம்பிப்பிள்ளை
119) வ/கி/1035திரு. தம்பு கோபாலபிள்ளை
120) வ/கி/1037திரு. கணபதிப்பிள்ளை முத்து
121) வ/கி/1045திரு. சிதம்பரப்பிள்ளை மருதையினார்
122) வ/கி/1047திரு. நாகநாதர் கந்தையா
123) வ/கி/1048திரு. தில்லையம்பலம் தியாகராசா
124) வ/கி/1052திரு. விசுவர் கதிரவேலு
125) வ/கி/1070திரு. செல்லத்தம்பி பொன்னுத்துரை
126) வ/கி/1079திரு. ருக்குமணி சிவகுரு
127) வ/கி/1125திருமதி. நாச்சிப்பிள்ளை பாலநாயகம்
128) வ/கி/1138திரு. ஆறுமுகம் இராசையா
129) வ/கி/1147திரு. சிவகுரு மாணிக்கவாசகர்
130) வ/கி/1148திரு. சின்னத்தம்பி நாகலிங்கம்
131) வ/கி/1162திரு. பொன்னையா வேலுப்பிள்ளை
132) வ/கி/1163திரு. செல்லர் இளையதம்பி
133) வ/கி/1170திரு. சின்னத்தம்பி நடராசா
134) வ/கி/1172திரு. மாரிமுத்து நாகமுத்து
135) வ/கி/1174திரு. சின்னத்தம்பி பொன்னையா
136) வ/கி/1198திருமதி. நல்லம்மா முருகேசு
137) வ/கி/1202திரு. குமாரவேலு இராசையா
138) வ/கி//1209திரு. சரவணமுத்து முருகேசு
139) வ/கி/1227திரு. கந்தர் பொன்னம்பலம்
140) வ/கி/1245திரு. சின்னத்தம்பி பொன்னையா
141) வ/கி/1250திரு. வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை
142) வ/கி/1257திரு. பரமானந்தம் வேலுப்பிள்ளை
143) வ/கி/1276திரு. கந்தன் கிருஸ்ணன்
144) வ/கி/1301திரு. கந்தையா மயில்வாகனம்
145) வ/கி/1308திரு. சொக்கலிங்கம் அருனாசலம்
146) வ/கி/1323திரு. கனகசபை கணேசபிள்ளை
147) வ/கி/1332திருமதி. பாக்கியம் மரியாம்பிள்ளை
148) வ/கி/1337திரு. இராமலிங்கம் கந்தையா
149) வ/கி/1339திரு. தனுக்கோடி கதிரவேலு
150) வ/கி/1345திரு. நாகநாதர் கோவிந்தபிள்ளை
151) வ/கி/1351திரு. கந்தையா பாலசுப்பிரமணியம்
152) வ/கி/1361திரு. சிவகுரு செல்வரத்தினம்
153) வ/கி/1365திருமதி. குணபூபதி தம்பையா
154) வ/கி/1378திருமதி. சின்னம்மா தம்பையா
155) வ/கி/1383திரு. செல்லையா பரமலிங்கம்
156) வ/கி/1385திரு. முருகப்பர் நாகமணி
157) வ/கி/1391திரு. இராமலிங்கம் குமாரசாமி
158) வ/கி/1392திரு. கணபதிப்பிள்ளை செல்லையா
159) வ/கி/1401திருமதி. பார்வதி கதிர்காமர்
160) வ/கி/1402திருமதி. நாகம்மா அப்பாக்குட்டி
161) வ/கி/1412திரு. முருகுப்பிள்ளை சபாரத்தினம்
162) வ/கி/1444திரு. தம்பிமுத்து பற்குணசிங்கம்
163) வ/கி/1446திருமதி. சொர்ணம் இராமநாதர்
164) வ/கி/1472திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி
165) வ/கி/1474திரு. ஆறுமுகம் நல்லையா
166) வ/கி/1490திரு. சபாபதிப்பிள்ளை இராசதுரை
167) வ/கி/1491திருமதி. இராசம்மா கணபதிப்பிள்ளை
168) வ/கி/1500திரு. பொன்னம்பலம் தம்பிராசா
169) வ/கி/1506திரு. சுவானி தோமாஸ்
170) வ/கி/1519திரு. சுப்பையா சந்தானம்
171) வ/கி/1522திரு. சின்னையா சண்முகம்
172) வ/கி/1534திரு. வேலுப்பிள்ளை நாகராஜா
173) வ/கி/1536திரு. இளையதம்பி வேலுப்பிள்ளை
174) வ/கி/1547திரு. முதலித்தம்பி சிவசுப்பிரமணியம்
175) வ/கி/1555திரு. நாகமுத்து நமசிவாயம்
176) வ/கி/1567திருமதி. இராசமணி அம்பலவாணர்
177) வ/கி/1605திரு. கணபதிப்பிள்ளை நடராசா
178) வ/கி/1609திரு. கந்தையா அம்பிகைபாகு
179) வ/கி/1618திரு. முருகர் இலக்குணம்
180) வ/கி/1622திரு. சவரிமுத்து சின்னத்தம்பி
181) வ/கி/1634திரு. சின்னத்தம்பி பரமலிங்கம்
182) வ/கி/1645திருமதி. பாறுவதி இளையதம்பி
183) வ/கி/1646திருமதி. மரிஸ்ரெலா அந்தோனிப்பிள்ளை
184) வ/கி/1663திரு. வேலாயுதம் பரமலிங்கம்
185) வ/கி/1680திரு. இராமநாதர் யாதவராயர்
186) வ/கி/1683திரு. கந்தையா முருகேசு
187) வ/கி/1703திரு. தம்பிமுத்து மார்க்கண்டு
188) வ/கி/1708திரு. முத்துக்குமாரு கதிரவேலு
189) வ/கி/1713திரு. மருதப்பு பரநிருபசிங்கம்
190) வ/கி/1727திரு. முதலித்தம்பி மயில்வாகனம்
191) வ/கி/1731திரு. முருகேசு சொர்ணலிங்கம்
192) வ/கி/1741திரு. முருகன் வேலன்
193) வ/கி/1753திரு. முருகேசு செல்லத்தம்பி
194) வ/கி/1761திருமதி. மகேஸ்வரிப்பிள்ளை கனகசபை
195) வ/கி/1769திரு. ஆறுமுகம் கதிரவேலு
196) வ/கி/1778திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
197) வ/கி/1781திரு. வல்லிபுரம் பசுபதி
198) வ/கி/1786திரு. கந்தையா நாகேந்திரன்
199) வ/கி/1790திரு. பொன்னர் சுப்பிரமணியம்
200) வ/கி/1791திரு. சின்னத்தம்பி மயில்வாகனம்
201) வ/கி/1805திருமதி. டெய்சி அந்தோனிப்பிள்ளை
202) வ/கி/1815திருமதி. தையலம்மை அந்தோனிப்பிள்ளை
203) வ/கி/1829திரு. முருகேசு கந்தையா
204) வ/கி/1831திரு. சரவணமுத்து தம்பிராசா
205) வ/கி/1838திரு. இராமநாதர் கனகர்
206) வ/கி/1839திரு. குட்டிப்பிள்ளை கந்தையா
207) வ/கி/1851திரு. பொன்னம்பலம் சுவாமிநாதன்
208) வ/கி/1854திருமதி. சொர்ணலட்சுமி சந்திரசேகரா
209) வ/கி/1861திரு. இராசாமிசுந்தரம் தங்கையா
210) வ/கி/1867திருமதி. சின்னம்மா நாகலிங்கம்
211) வ/கி/1868திரு. வயிரமுத்து சண்முகம்
212) வ/கி/1872திருமதி. நாகம்மா கந்தையா
213) வ/கி/1886திரு. இராமலிங்கம் மகாலிங்கசிவம்
214) வ/கி/1890திருமதி. நாகம்மா ஆறுமுகம்
215) வ/கி/1892திரு. கதிரவேலு சிதம்பரப்பிள்ளை
216) வ/கி/1899திரு. கேசவபிள்ளை தில்லையம்பலம்
217) வ/கி/1934திரு. ஆரோக்கியம் யாகு
218) வ/கி/1944திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
219) வ/கி/1946திரு. அருளானந்தம் சூசைதாசன்
220) வ/கி/1959திரு. யாதவராயர் குமாரசாமி
221) வ/கி/1982திரு. அல்பிரட் சிவபாதம்
222) வ/கி/1988திருமதி. சொறணம் செல்லத்துரை
223) வ/கி/1992திரு. கணபதி பசுபதி
224) வ/கி/1993திரு. பொன்னையா கனகலிங்கம்
225) வ/கி/1999திரு. சண்முகம் மார்க்கண்டு
226) வ/கி/2028திரு. தம்பையா செந்தில்நாதன்
227) வ/கி/2030திரு. வாரித்தம்பி முருகேசு
228) வ/கி/2034திரு. கதிரவேலு தருமலிங்கம்
229) வ/கி/2037திரு. வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
230) வ/கி/2046திரு. கந்தையா நல்லையா
231) வ/கி/2050திரு. சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு
232) வ/கி/2058திரு. நீலையினார் சோமசுந்தரம்
233) வ/கி/2063திரு. நாகலிங்கம் முத்துக்குமாரு
234) வ/கி/2084திரு. பொன்னம்பலம் சரவணமுத்து
235) வ/கி/2090திரு. கந்தசாமி சிவஞானம்
236) வ/கி/2107திரு. சின்னத்தம்பி முத்தையா
237) வ/கி/2114திரு. கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை
238) வ/கி/2132திரு. முருகேசு மயில்வாகனம்
239) வ/கி/2135திரு. வெள்ளைச்சாமி துரைப்பாண்டி

(தொடரும்...)

# தீயன அகற்றிடும் தீபாவளி

இந்து சமயத்தவர்களின பண்டிகை களில் சிறப்பாக்க கொண்டா டப்படுவது தீபாவளியாகும். தீய இருள்காலத் தீப ஒளி ஏற்றி அகத் திலும், புறத்திலும் நல்ஒளிவீச வேண்டும் என்று உயர்ந்த தத்து வத்தை மக்கள் மனதிலே புரிய



வைப்பதான ஒரு திருநாளாகத் தீபாவளி கொண்டாடப்படுகின்றது.

நரகாசுரனின் அதர்மச்செயல் அழிக்கப்பட்டு தாமம் நிலைநாட டப்பட்ட தினமே தீபாவளி நன் னாளாகும். அரக்கவடிவினனான அசுரனை திருமால் வதம் செய்த இந்நாளை மக்கள் மகிழ்வுடன் கொண்டாடுகின்றார்கள்.

தர்மம் தழைப்பதற்கு அதர் மம் அழிக்கப்பட வேண்டும். உல கிலே மற்றவர்களுக்கு துன்பங்க களையும் கொடுமைகளையும் தநத அசுரனை அழித்தான் திருமாள். எப்பொழுது உலகில் தர்மம் அழிந்து அதர்மம தலைகாட்கின்றதோ அப் போதெலலாம் நான் அவதரிப்பேன் எனக் கீதையில் திருமாலின் அவ தாரமாகிய கண்ணன் கூறியதற்க மைய தர்மம் நிலைநாட்டப்பட்டது. இது மானிட வாழ்வில் என்றும் நல்லதொரு படிப்பினையாக உள் ளது.

மேலும் அதர்மம் மிகுந்ததால் மக்கள் தம் வாழ்வில் நல்லன செய்யவோ, ஒழுங்காக கடமை களைப் புரியவோ முடியாது. எனவே தான் தீபாவளி நாளிலே அதர்ம குணமான அரக்கத்தனம் அழிந்தது எனக் கூறப்படுகிறது. இந் நாளில் மக்கள் வைகறை யில் எழுந்து தத்தம் நாளாந்த கடமைகளை ஒழுங்காகச் செய்து, இறை வழிபாடு நடாத்தித் தான தர்மங்கள் செய்கின்றனர். உற்றார், உறவினருடன் சேர்ந்து புத்தாடை உடுத்தி, தீபாவளிப் பட்சணங்கள் பரிமாறி தர்மம் தழைத்தது என் றும் அதர்மம் ஒழிந்தது என்றும் பெருமிதம் கொள்கின்றார்கள்.

இந்து சமய பண்டிகைகள், விரதங்கள் விழாக்கள் யாவும் வாழ்வியலுக்கு வேண்டிய நல் வழிகளை, அறநெறிகளை மக்க ளுக்கு நன்கு அறிவுறுத்தி நிற் கின்றன.மக்களை வையகத்தில் வாழ்வாங்கு வாழும் நல்வழி களுக்கு இட்டுச்செல்வனவாகவே அவை திகழ்கின்றன.மக்களுக்கு இதனைச் செவ்வனே புரிய வைப் பதற்கும் வாழ்வில் நல்வழிகளை நாடவைப்பதற்காகவுமே புராணக் கதைகள் மூலம் நல்ல பல தத்து வங்கள் எடுத்துக்கூறப்பட்டன.

இந்துசமய தத்துவார்த்த உண் மைகளையும் ஆழமான நல்ல கருத்துக்களையும் நன்கு ஆராய்ந் தறியாதவர்களே புராணங்களை மேலெழுந்தவாரியாகப் படித்து விட்டு, அவற்றைக் கட்டுக்கதை கள் எனப் புறந்தள்ளுகின்றனர்.

இந்துமத விரதங்கள், விழாக் கள், பண்டிகைகள் சம்பநதமான ஆழ்ந்த தத்துவக் கருத்துககளையும் அவற்றால் நமக்குக் கிடைக்கக் கூடிய நல்லறிவுசசிந்தனைகளை யும் மனதிற் பதிபபோமானால்

**கு-தியாகராஜ சர்மா**

நாட்டில் தீபாவளி போனற பண்டி கைகள் மூலம் எங்கும் தர்ம ஒளி பிரகாசிக்கவும, அதர்ம ஒளி நீங்க வும் வழிபிறக்குமன்றோ!

தீபாவளி நன்னாளிலே தீமை கள் அகல இறைவனஇணருளை வேண்டிப் பிரார்ததிப்போமாக.

**யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் [வ-து]**

**பதவி வெற்றிடம்**

**பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது**

1. கணக்குப் பதிவாளர் (01) ச.கு.இல.301.11, 5750-7650 / 90x10,100x10
2. காசாளர் (01) ச.கு.இல.306.12, 5500-7200 / 80x10,90x10
3. வெளிக்கள உத்தியோகத்தர்(01)ச.கு.இல.209.13, 5250- 6800 / 75x10,80x10
4. தட்டெழுத்தாளர் (01) ச.கு.இல.305.15, 4750-6100 / 65x10,70x10

சம்பளத் திட்டத்திற்கு மேலதிகமாக கூ.வே.ஆ.குழு சு.இல 50/2000, 53/2001க்கு அமைய ரூ. 400/= படியும் ரூ. 1200/= படியும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் ரூ 10/= செலுத்தி விண் ணப்பத்தினையும் கல்வித்தகைமை, ஏனைய விபரங்களையும் சமாசக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 2004.11.25 காலை 10.00 மணி

637,
கே.கே.எஸ்.றோட், பதில் மாவட்டச்செயலாளர்
யாழ்ப்பாணம். (C/688)

## முஸ்லிம் இளைஞர் ஒருவர் பொலநறுவையில் சுட்டுக்கொலை

பொலநறுவை மாவட்டம் கட்டு வன்விலலு முஸ்லிம் கிராமத்தில முஸ்லிம் இளைஞ ரொருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர் களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இரவு 7.30இற்கும் 7.45இற்கு மிடையில் இவரது வீட்டிற்கு மோட் டார் சைக்கிளில் சென்ற இருவர் இவரது பெயரைக்கூறி வெளியே அழைத்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

கொல்லப்பட்டவர் மொகமட் தாஜூ தீன் (வயது 25) என அடையாளம் காணபட்டுள்ளதாக வெலிகந்த பொலி ஸார் தெரிவித்தனர். (ற)

## கிரிக்கெற் சபைக்கு வரிவிலக்கு தேவையற்றது என்கிறார் விஜய்சிங்

இந்திய கிரிக்கெற் சபைக்கு வழங்கபபட்ட வருமான வரி விலக குச் சலுகை தொடர்பாக மீள் பரி சீலனை செய்ய வேண்டுமென இந்தியாவின் மத்திய வருமான வரித்துறை தலைமை ஆணையா ளர் ராவ்ரன் விஜய்சிங் வலியுறுத் தியுள்ளார்.

மத்திய நேரடிவரி விதிப்புச் சபைக்கு அவர் எழுதிய கடிதத் திலேயே மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.


தனியார் தொலைக்காட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்தபின் இந்தி யாவில் கிரிக்கெற் வியாபாரமாக மாறிவிட்டது. கிரிக்கெற் கட்டுப் பாட்டுச்சபையானது சிறிய சங் கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யபபட்ட ஒரு தனியார் அமைப் பாகும்.

ஆயினும் கிரிக்கெற் போட்டி களை ஒளிபரப்பும் உரிமையை வழங்க இந்த அமைப்பு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களி டம் ஏலம் நடாத்தி அதிகளவு வருமானத்தைப் பெறுகிறது.

கிரிக்கெற், ஹொக்கி போன்ற விளையாடடுக்களை மேம்படுத்தும், மேற்பார்வை செய்யும் மற்றும் ஊக்குவிக்கும் சங்கங்களுக்கு விதி விலக்கு அளிக்கும் உத்தரவை கடந்த 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மத்திய அரசு விலக் கிக் கொண்டுள்ளது. இந்நிலை யில் தொடர்ந்தும் கிரிக்கெற் கட் டுப்பாட்டுச்சபை வரிவிலக்கக கோருவது நியாயமற்றது. கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைக்குக் கிடைக் கும வருமானத்தில் பெரும் பகுதி போட்டிகளுக்கான அனுமதிச் சீட்டு விற்பனை, தொலைக்காட்சி ஒளி பரப்பு உரிமை வழங்குதல், போட் டிகள நடாத்துதல் போன்ற சேவை யற்ற வியாபார நடவடிக்கைகள் மூலமே கிடைக்கிறது.

ஆதலால் கிரிக்கெற் ஒரு வியா பாரமாக மாறிவிட்ட நிலையில் அதைப் பொதுச்சேவையாகக் கருத முடியாது. ஆகவே இனியும் வரி விலக்கு அளிக்க முடியாது. கிரிக் கெற் கட்டுப்பாடடுச்சபையானது பொது மக்களுக்கு பலனளிக்கும் பணிகளையோ வேறு உதவிப் பணி களையோ மேற்கொள்ளாததால் இனியும் அதற்கு வரிவிலக்குச் சலுகை அளிக்க வேண்டியதில்லை எனவும் விஜய்சிங் தெரிவித்திருக் கிறார்.

கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை யின் குறிக்கோள் கிரிக்கெற்றில் பயிற்சி அளித்து புதிய வீரர்களை உருவாக்குவதேயாகும். ஆனால் இதற்கு மாறாக இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை வியாபார நட வடிக்கைகளிலேயே அதிக அக் கறைகொணடுள்ளதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. (து-7)



மியாமி டொல்பின் அணிக்கும் ஹரிசோனா ஹார்டினல் அணிக் குமிடையே நடைபெற்ற றகர் போட்டியில் மியாமி டொல்பின் அணி மிகக் குறைந்த புள்ளி வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. படத்தில் வெற்றிபெற்ற அணி வீரர் ரொப் ஹோன்றிட் எதிரணிவீரரை இழுத்துப் பிடித்து மடக்க முயற்சிக்கின்றார்.

## சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன் ஷரே அணிக்காக விளையாடுவார்

இங்கிலாந்திலுள்ள பிராந்திய அணிகளில் முன்னணியிலுள்ள கிரிக்கெற் அணியான ஷரே அணி, இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர் பஜனசிங்கை தமது அணியில் சேர்த் துககொள்ள ஆர்வம் கொண்டுள்ளது.

இது தொடர்பாக ஹர்பஜனு டன் பேச்சுவார்த்தை நடத்தியுள் ளது ஷரே அணி. அவரும் அந்த அணிக்காக விளையாட விருப்பம் தெரிவித்துள்ளார். ஆயினும் இந் திய கிரிக்கெற்சபை, இதுவரை அதிகார பூர்வமாக அதற்கு ஒப்பு தல் அளிக்கவில்லை. தற்போது இந்திய கிரிக்கெற் சபையில் குழப் பங்கள் நிலவுவதால் ஒப்புதல் கிடைக்க தாமதமாகிறது.

ஒப்புதல் கிடைத்ததும் ஷரே அணிக்காக விளையாடும் ஒப்பந் தத்தில் ஹர்பஜன் கையெழுத் திடுவார்.

2005ஆம் ஆண்டிற்காகவே இவ் வொப்பந்தம் மேற்கொள்ளப்படு கிறது. இதே நேரம் பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன முஷ்டாக் காயம் காரண மாக ஷரே அணிக்காக விளையாட முடியாத நிலையிலேயே, அவருக் குப் பதிலாக ஹர்பஜன் விளையாடு கிறார். (து-7)

## விளையாட்டு செய்திகள்

## பவளவிழா கிரிக்கெற் போட்டியில் கங்குலிக்கு விளையாட வாய்ப்பு

ரஞ்சி கோப்பை கிரிக்கெற்றில் துடிப்பாக ஆடிய கங்குலி உடல் தகுதிச் சோதனையில் தேறிவிடு வார் எனத் தெரிகிறது. இந்திய அணி யின் தலைவர் கங்குலிக்கு சமீ பததில் தொடைப் பகுதியில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. இதனால் இவர் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நாக்பூல் மும்பை டெஸ்டில் பங் கேற்க இயலவில்லை. இவருக்கு நடைபெற்ற உடல் தகுதி சோத னையில் தேறினால் மட்டுமே 13ஆம் திகதி நடக்கும் பாகிஸ்தானுக்கு எதி ரான ஒருநாள் போட்டியில் பங் கேற்க இயலும்.

இதறகிடையே துடுப்பாட்டப் பயிற்சி பெறும் நோக்குடன் மேற்கு வங்க அணிக்காக ரஞ்சி கோப்பை போட் டியில் விளையாட முடிவு செய் தார் கங்குலி. கர்நாடக அணிக்கு எதிரான இப் போட்டியில் நேற்று முன்தினம் இவர் எவ்வித சிரமு மின்றி ஆடினார். விக்கெற்றுக ளுக்கு இடையே விரைவாக ஓடிய இவருக்கு ஷாட் அடிப்பதிலும் எவ்வித சிக்கலும் ஏற்படவில்லை.

115 நிமிடங்கள் களத்தில் நீடித்த கங்குலி 76 பந்துகளை சந்தித்து 27 ஓட்டங்களைப் பெற் றார். (து-7)

## நியூசிலாந்துத் தொடருக்கான இலங்கையணி அறிவிப்பு

அடுத்த மாதம் நியூசிலாந்துக் குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள விருக்கும் இலங்கை அணி வீரர் களின் பெயர்ப்பட்டியல் வெளியி டப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் ஆரம்பத் துடுப பாட்ட வீரரான அபிஷேக குணவர்த் தனவும் விக்கெற் காப்பாளரான றொமேஸ் களுவிதாரணவும் நீக்கப பட்டுள்ளனர்.

ஐ.சி.சி.சம்பியன் போட்டிகளின் போது துர்நடத்தையில் ஈடுபட்ட தற்காக அபிஷேக குணவர்த்தன நீக்கப்பட்டிருக்கிறார். விக்கெற் காப்பிலும், துடுப்பாட்டத்திலும் சிறப்பாகப் பிரகாசிக்காததன் கார ணத்தால் களுவிதாரண அணியில் இடம்பெறவில்லை. அதேநேரம் சர்வ தேசக் கிரிக்கெற் போட்டிகளிலி ருந்து தாம் ஓய்வு பெறுவதாக களுவிதாரண அறிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அணி யின் சுழற்பந்து வீச்சாளர் முத் தையா முரளிதரனின் பெயரும் இப்பட்டியலில் இடம்பெறவில்லை. ஆயினும் அவரது மருத்துவரின் அறிக்கையின்படி இத்தொடரில் முரளிதரன் பங்குபற்றும் வாய்ப் புக்கள் அதிகம் உள்ளதாக கிரிக் கெற் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அணி நியூசிலாந்து அணியுடன் 5 ஒருநாள் போட்டி களிலும், 2 டெஸ்ட் போட்டிகளி லும் பங்கேற்கவுள்ளது. அறிவிக் கப்பட்டுளள இலங்கை அணி விப ரம் வருமாறு:-

மாவன் அத்தப்பத்து (தலை வர்), மஹில ஜெயவர்த்தன, சனத் ஜெயசூரிய, குமார் சங்கக்கார, திலக ரட்ண டில்ஷான், சமிந்தவாஸ், உப் புல் சந்தன, நுவான் சொய்ஷா, டில் ஹார பெ்ணாணடோ, ரங்கன ஹேரத், சமன் ஜெயந்த, டிலான் சமரவீர, திலின கந்தம்பி, கௌஷல் லொக்கு ஆராய்ச்சி, லசிசுமலிங்க, இயன் பனி யல், பர்வீஸ் மஹ்ரூப், நுவான் குல சேகர, ஜெஹான் முபராக், பிர சன்ன ஜெயவர்த்தன. (து-7)

# நீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-4
தொடர் -I

மு. திருச்செல்வம்

## இணைந்து உருவாக்குவோம்

1945இல் சோல்பரி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த தமிழ்த் தலைவர்கள் ,சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழ் மக்கள் ஒரே நாட்டில் இரு இனங்களாக வாழ்வதற்கு ஒப்புதல் கொடுத்தார்கள். சரிசமமாக வாழ்வதற்கு ஒப்புக்கொண்டனர். கூட்டாட்சி அரசையோ, பறிகொடுத்த தமிழ் ஈழ அரசை மீட்டுத்தனி நாட்டு அரசினையோ கேட்கவில்லை. பாகிஸ்தானைப் பிரித்துத்தர ஜின்னா கேட்டது போல் பிரிட்டிஷாரிடம் தமிழ்மக்கள் தமிழ் ஈழ அரசைப் பிரித்துத்தரக் கேட்கவில்லை.

1970 இல் மூதறிஞர் செல்வநாயகத்தின் தலைமையில் அரசியலமைப்பு யாக்க அவை சென்ற தமிழரசுக் கட்சியினர் தமிழ் மக்கள் தனியான அரசை, இறைமையும் ஆட்சியுரிமையும் உடைய தமிழ் ஈழ அரசை அமைக்க விரும்புகிறார்கள் எனக் கூறவில்லை.

இந்திய அரசியலமைப்பு யாக்க அவையில் சேரமாட்டோம், பணி புரியமாட்டோம்,அரசியல மைப்புத் தாயாரிப்பதில் பங்குகொள்ளமாட்டோம் என ஜின்னா தலைமையிலான முஸ்லிம் லீக் கூறியது. அரசியலமைப்பு யாக்க அவையைப் பகிஷ்கரித்தது. நாட்டின் மக்கள் தொகையில் நான்கின் ஒரு பங்கின் பிரதிநிதிகள் இல்லாத அரசியலமைப்பு யாக்க அவை முழுமை அற்றது எனப் பிரிட்டிஷ் அரசு கருதியதால் பாகிஸ்தான் என்ற நாடு எழுந்தது. ஜின்னாவின் பிடிவாதமான போக்கு முஸ்லிம்கள் தனி நாடு பெற வழிவகுத்தது.

தமிழ்த் தலைவர்கள் அவ்வாறு பிடிவாதமாக இருக்கவில்லை. ஒத்துழைப்போம். சேர்ந்து பணிபுரிவோம் என்று கூறினார்கள்.1970 ஜுலை 21ஆம் நாளன்று அரசியலமைப்பு யாக்க அவையில்,ஊர்காவற்றுறைத் தொகுதி உறுப்பினர், தமிழரசுக் கட்சியைச் சார்ந்த கார்த்திகேசு பொன்னம்பலம் இரத்தினம ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறினார்.

"..... இந்த நேரத்தில் இந்தக் கூட்டத்தில், தமிழ் மக்களிடமிருந்து நாங்கள் இணைப்பாட்சி பெறுவதற்குத் தமிழரசு பெறுவதற்குப் பெற்றுக்கொண்ட அதிகாரத்தை நீங்கள் மதிக்க வேண்டும். நீங்கள் சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அதிகாரத்தை நாங்கள் மதிப்பது போல் நாங்கள் தமிழ் மக்களிடமிருந்து பெற்ற அதிகாரத்தை நீங்கள் மதிப்பீர்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை. சிங்கள மக்களின் தலைவர்களும் தமிழ் மக்களின் தலைவர்களும் மக்களிடமிருந்து பெற்ற அதிகாரங்களுக்குப் பங்கம் உண்டாக்காமலும், ஓரினத்தை ஓரினம் அடக்கி ஆளாமலும், அரசியமைப்பு ஆக்கப்படும் என்ற நம்பிக்கையினாலே தான் நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்க முன்வந்துள்ளோம"

## குடியரசு

1971 மார்ச் 15ஆம் நாள் புதிய அரசியலமைப்புப் பற்றிய முதலாவது அடிப்படைத் தீர்மானம் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களால் முன்மொழியப்பட்டது.

"ஸ்ரீலங்கா சுதந்திரமான இறைமை கொண்ட, தன்னாதிக்கமுள்ள ஒரு குடியரசாதல் வேண்டும்"அந்தத் தீர்மானம், இலங்கையின் அரசியலில்,புதிய முற்றிலும் புதிய நிலையை உருவாக்க வழிவகுத்தது. அரசியலமைப்பு யாக்க அவையில் இருந்த சிங்கள உறுப்பினாகளும், தமிழ உறுப்பினர்களும், அந்தத் தீர்மானத்தை ஒருமித்து எதிர்ப்பின்றி ஆதரித்து நிறைவேற்றினா்.

## ஒற்றையாட்சியா கூட்டாட்சியா?

1971 மார்ச் 15ஆம் நாள், புதிய அரசியலமைப்புப் பற்றிய இரண்டாவது அடிப்படைத் தீர்மானம், அரசியலமைப்பு அமைச்சர் கலாநிதி கொல்வின் ரெஜினால்ட் த சில்வா அவர்களால் முன்மொழியப்பட்டது.

"ஸ்ரீலங்கா குடியரசு ஒற்றையாட்சி அரசொன்றாதல் வேண்டும்"

இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்ட உடனேயே ,மூதறிஞர் செல்வநாயகத்தின் சார்பில் உடுவில் தொகுதி உறுப்பினர் விஸ்வநாதர் தர்மலிங்கம் இந்தத் தீர்மானத்துக்கான திருத்தம் ஒன்றை முன்மொழிந்தார். உடுப்பிட்டித் தொகுதி உறுப்பினர் கந்தப்பா ஜெயக்கொடி திருத்தத்தை வழிமொழிந்தார்.

(அ) "ஒற்றையாட்சி" என்ற சொல்லை அகற்றி விட்டு அதனிடத்தில் "சமஷ்டி" என்ற சொல் இடப்படவேண்டும்.

(ஆ) "ஸ்ரீலங்கா என்ற சொல்லின் முன் 23.11.70 அன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புக் குறித்த விஞ்ஞாபனத்தில் பிரேரிக்கப்பட்டவாறு" என்ற சொற்கள் சேர்க்கப்படல் வேண்டும்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் இந்தத் திருத்தத்தின் தாற்பரியம் பற்றி விரித்து உரைத்தார்கள் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் பேசிய பொழுது பல தடவை சிங்கள உறுப்பினர்கள்,குறுக்கிட்டார்கள்,கேள்விக் கணைகள் தொடுத்தார்கள்.

1971 மார்ச் 27 இல் மூதறிஞர் செல்வநாயகம் சார்பில் முன்மொழியப்பட்ட இத் திருத்தங்கள் அரசியலமைப்பு யாக்க அவையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டுத் தோல்வி கண்டன. இரண்டாவது அடிப்படைத் தீர்மானம் திருத்தமுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## பௌத்தமும் மதச்சார்பின்மையும்

1971 மார்ச் 28 இல் மூன்றாவது அடிப்படைத் தீர்மானம் அமைச்சர். திக்கிரி பண்டா இலஙகர்த்தினா அவர்களால், முன்மொழியப்பட்டது."ஸ்ரீலங்காக் குடியரசிலே பெரும்பான்மை மக்களன் சமயமாகிய பௌத்த மதம் அதற்குரிய இடம் வழங்கப்படல் வேண்டும் 5 (4) ஆம் அடிப்படைத் தீர்மானத்தினால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லாச் சமயங்களுக்கும் உறுதியளிக்கும் அதே நேரத்தில் பௌத்த மதத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்"

1971மே 14ஆம் நாள் மூதறிஞர் செல்வநாயகம் சார்பில் வி.தர்மலிங்கம் இத் தீர்மானத்துக்கு ஒரு திருத்தத்தை முன்மொழிந்தார். கா.பொ. இரத்தினம் வழிமொழிந்தார்.

"ஸ்ரீலங்கா குடியரசு ஒரு மதச்சார்பற்ற அரசாதல் வேண்டும். ஆனால் அது பௌத்தமதம்,இந்து மதம் ,கிறிஸ்தவமதம், இஸ்லாம்மதம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், பேணிவளர்க்கவும் வேண்டும்.இத்திருத்தத்தை முன்மொழிந்து பேசிய தர்மலிஙகம் 1971 பெப்ரவரி 7ஆம் நாள் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டைக் குறிப்பிட்டார். இலங்கைத் தழிரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ,ஈழத் தமிழா ஒற்றுமை முன்னணி, தமிழா சுயாட்சிக் கழகம் ஆகிய நான்கு கட்சிகளும் கலந்துகொண்ட மாநாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்.

(தொடரும்)

## ஆஸி. இல் இன்று மாவீரர் தினம்

(அவுஸ்திரேலியா)

நவம்பர் 11ஆம் திகதி இன்று அவுஸதிரேலிய மக்கள் தங்களுடைய மாவீராகளை நினைவு கூரும் தினமாகும். நவம்பர் மாதம் 11ஆம்திகதி 11ஆம் மாதம் அன்று பகல் 11 மணிக்கு அவுஸ்திரேலிய நாட்டுப்பற்றாளர்கள், தம்முடைய வீழ்ந்த வீர்களை நினைத்து ஒரு நிமிடம் அகவணக்கம் செலுத்துவார்கள். இந்த 11ஆம் திகதி 11ஆம் மாதம் 11மணிக்கு பின்னாலும் ஒரு சோகம் நிறைந்த வரலாறு உண்டு.

86 ஆண்டுகளுக்கு முன்னால் அதாவது 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி பகல் 11 மணிக்கு ஜேர்மன் நாடு, ஒரு தற்காலிக போா நிறுத்த உடன்பாட்டில் கையெழுத்திட்டதோடு, முதலாவது உலக மகாயுத்தம் முடிவுக்கு வந்தது.

அன்றைய தினத்திலிருந்து 1939ஆம் ஆண்டுவரை நவம்பர் மாதம் 11ஆம் திகதியை யுத்தநிறுத்த தினமாக அவுஸ்திரேலிய மக்கள் நினைவு கூர்ந்து வந்தார்கள். முதலாவது உலக மகா யுத்தத்தின் போது மரணித்த அனைவரையும் நினைவுகூரும் தினமாக இத்தினம் அமைந்தது.

ஆனால் யுத்தம் மீண்டும் வெடித்தது. இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கியது. அது 1945இல் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் யுத்தநிறுத்த தினம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு நினைவு தினம் (REMEMBERANCE DAY) என்று அழைக்கப்பட்டு நினைவு கூரப்படுகின்றது.

முதலாவது உலக மகாயுத்தத்தின் போது **First Australian Imperial Force** இல் இணைந்து போர் புரிந்த ஆண்களும், பெண்களுமாக அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட அவுஸ்திரேலியர்கள் மீண்டும் தமது தாய் நாட்டிற்கு திரும்பி வரவில்லை. எதிரியின் தேசத் திலேயே, போர்க்களங்களிலே அவர்கள் மரணித்தார்கள். அவர்களை நினைவு கூரும் தினமே இன்றாகும்.(ற)


சட்டநாதர் திருக்கோவில்
இலட்ச நாமார்ச்சனை பூர்த்தி விழா
11.11.2004 வியாழக்கிழமை

பி.ப-3.00மணி - 108 சங்காபிஷேகம்
பி.ப-4.00மணி - பூஜை
பி.ப-4.15மணி - அர்ச்சனை பூர்த்தி
பி.ப-5.30மணி - ஹோம சமர்ப்பணம்
பி.ப-5.45மணி - கேதார கௌரி பூஜை
பி.ப-6.30மணி - பெருமான் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு மங்கள வாத்தியம் முழங்க வீதி உலா உற்சவம் நடைபெறும்.

(8997) சுபம். உபயகாரர்









யாழ். மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வாணிவிழா அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில், மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமை உரையாற்றுவதையும், நல்லை ஆதீன குரு முதல்வர் ஆசியுரை வழங்குவதையும், அருகில் ஆணையாளருடன் ஆறு திருமுருகன் அமர்ந்திருப்பதையும் விழா ஏற்பாட்டாளர்களுடன் கலைஞர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- ஜோ.ஜெஸ்ரின்)

முகம் நோக்கிநிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின் - குறள்

வலம்புரி

# ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றும் திருநாளாகுக!

இன்று தீபாவளித் திருநாள். அதர்மம் அழிந்து தர்மம் வென்ற நாள். இதனை இன்னோர் வடிவத்தில் கூறுவதாயின் ஆணவம் அழிந்து மெய்யறிவு பெற்ற நாள் என்றும் கூறலாம்.

நரகாசூரன் என்ற கொடியவன் காத்தற் கடவுளாகிய கண்ணபரமாத்மாவினால் வதம் செய்யப்பட்ட நாளே தீபாவளித் திருநாள் என புராணங்கள் பேசும். இங்கு பேசப்படுகின்ற புராணக் கதைகள் யாவும் உண்மையானவையா? அல்லது கற்பனையானவையா? என்ற ஆராய்வுகள் தேவையற்றவை.

புராணங்கள் கூறுகின்ற கதைகளில் இருக்கக்கூடிய தத்துவங்கள் - வாழ்வியல் கருத்துக்கள் என்ன என்பதே நோக்கப்படவேண்டிய விடயமாகும்.

அவ் வகையில் தீபாவளித் திருநாள் நமக்கு உணர்த்தும் தத்துவம் தான் யாது? இருள் என்பது எதையுமே எமக்கு தெரியப் படுத்தமாட்டாதது. நாம் தேடுவதை எடுக்க வேண்டுமாயின் இருள் அகல வேண்டும். இருளை அகற்றுவதற்கு இருக்கக்கூடிய ஒரே வழி தீப ஒளியை ஏற்றுவதே ஆகும்.

தீபம் என்பது வெளிச்சத்தைத் தருவது. வெளிச்சம் இருளை நீக்குவது. இருள் அகல்வதற்கும், ஒளியேற்றப்படுவதற்கும் இடையே ஓர் எதிர்த் தொடர்பு உண்டு.

அதாவது இருள் இருக்கின்ற இடத்தில் ஒளி இருக்கமுடியாது. அதேபோன்று ஒளி இருக்கும் இடத்தில் இருளுக்கு இடமே கிடையாது.

இதுவே மனித வாழ்வியல் தத்துவம். வறுமை இருக்கின்ற இடத்தில் செல்வம் கிடையாது. அறியாமை என்ற இருளுக்குள் அறிவென்ற ஒளி கிடையாது.

தூக்கம் என்பது விழிப்பன்று. இவ்விதமாக மனித வாழ்வு இருளுக்குள்ளும், இருள் அகன்ற ஒளிப் பிழம்பிற்குள்ளும் சுழல்கின்றது. அங்குதான் ஒளிக்குள் இருப்பவர்களுக்கு பெரும் கடமை காத்திருக்கின்றது.

அந்தக் கடமை எதுவெனில் இருளுக்குள் இருக்கின்றவர்களை தங்களிடம் உள்ள ஒளியைப் பாய்ச்சி அவர்களையும் வெளிச்சத்திற்குள் கொண்டுவருவது ஆகும். ஏழைகளின் இருளை செல்வந்தர்களும், அறியாமை இருளில் அலைபவர்களை அறிவாளிகளும், அகந்தை கொண்டவர்களை மெய்ஞ்ஞானிகளும் வெளிச்ச உலகிற்கு அழைத்து வர வேண்டும்.

இவ்வாறு செய்யும் பணியால் எங்கும் ஒளி பிரகாசிக்கும். ஒரு தீபத்திலிருந்து ஆயிரம் தீபங்களை ஏற்றமுடியும். எனினும், அந்தத் தீபத்திலிருந்து ஏனைய தீபங்களை ஏற்றினோமோ அந்தத் தீபத்தில் எந்தத் தேய்வும் இருக்கமாட்டாது.

மாறாக எங்கும் ஒளிப்பிரபாகத்தில், ஓர் தெய்வீக அழகு காட்சி தரும். அதுவே நிஜம். அதனையே இன்றைய தீபாவளித் திருநாள் உணர்த்துகின்றது.

இதனை உணர்ந்து ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்ற அனைவரும் முன்வரவேண்டும்.

# கூட்டமைப்பினர், ஹக்கீம், ஜயந்த தனபால ஆகியோரை எரிக்சொல்ஹெய்ம் சந்தித்து விரிவாகப் பேச்சு

(கொழும்பு)

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து தற்போதைய நிலவரங்கள் குறித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்புக்களில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கா, நோர்வே வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி சொல்பிரித் லியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நோர்வே தூதராலயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்ற சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில்,

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், சுரேஷ் பிரேமசந்திரன, திருமதி.பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தகவல் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதில் மேலும் தாமதங்கள் தொடருமானால் நிலைமை மோசமடையும் என்பதை இச்சந்திப்பின்போது நாம் எடுத்துக் கூறியுள்ளோம்.

ஜனாதிபதியிடமோ, அரசாங்கத்திடமோ சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக அர்ப்பணிப்பு இல்லை. பதவியை எப்படி பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதிலேயே ஆர்வம் காணப்படுகின்றது.இதன் காரணமாக தமிழ் மக்கள் ஜனாதிபதியின் மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழந்து வருகின்றார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம் என்றார்.

அத்துடன் போர் நிறுத்த உடன்படிக்கையை முறையாகக் கடைப் பிடிப்பதற்கு இரு தரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென நோர்வே பிரதிநிதி தங்களிடம் கோரியதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடனான சந்திப்பு அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் வழமைபோல் தமக்கு தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அக் கட்சி முன்வைத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் ஆளும்கட்சிக்கு மாறினாலும தமது இக் கோரிக்கைக்கு பாதிப்பு இல்லை என்பதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துக் கூறியது.

கடந்தகால யுத்தத்தினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளின் ஆவண அறிக்கையொன்றும் நோர்வே பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

நோர்வே பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்தின் சமாதானச் செயலக பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவையும் சந்தித்து உரையாடியுள்ளனர். (ஐ-121,8)

# சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படுமென்ற உத்தரவாதத்தை நோர்வே வழங்கவில்லை

## எரிக்கை சந்தித்த பின்னர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

நோர்வே பிரதிநிதிகளின் வருகை காரணமாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகலாம் என மக்கள் நம்புகின்றார்கள். ஆனால் அதற்கான உத்தரவாதத்தை தரும் நிலையில் அப் பிரதிநிதிகள் இல்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட்டுள்ளார்.

நோர்வே விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிற்கும சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குமிடையில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்பு கருத்து வெளியிட்ட போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எதிர்வரும் தனது மாவீரா தின உரையின்போது சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக சாதகமான சமிக்ஞையொன்றை வெளியிடக் கூடும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதையும் இந்தச் சந்திப்பின் போது தாம் சுட்டிக் காட்டியதாகவும் அவர் தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் பிளவுபட்டிருக்கின்றது. இது பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக இருக்குமென்றே நாம் கருதுகின்றோம். சந்தர்ப்பம் வரும் போது முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும் என உறுதிமொழிகள் தரப்படுகின்றன. ஆனால் எந்தச் சந்தர்ப்பம் என்று எவரும் கூறவில்லை.



எம்மைப் பொறுத்தவரை அரசியல் பேச்சுவார்த்தை மற்றும் இடைக்கால நிர்வாக சபை யோசனை பற்றி ஆராயும் பொழுது தனித்தரப்பு தேவை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எமது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவிகளை வழங்கி தன் பக்கம் இழுக்கின்றார். இது தனித்தரப்பு கோரிக்கையை பலவீனப்படுத்துவதற்காக திட்டமிட்ட சதி நடவடிக்கையாகும். தனித் தரப்பு கிடைக்கும் பொழுது சகல முஸ்லிம் கட்சிகளும் அதில் உள்ளடக்கப்படும் என்றும் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-8)

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அனைத்து இன மக்களும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டும்

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் மிக கஷ்டமானதும் இக்கட்டானதுமான பணியை மேற்கொண்டுள்ள ஜனாதிபதிக்கு அரசியல் வேறுபாடுகளைக் கைவிட்ட சகல இன மக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு சர்வோதய இயக்கத்தலைவர் கலாநிதி ஏ.ரி ஆரியரட்ண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவடையும் இவ்வேளையில் இரு தசாப்தமாக நிலவி வரும் வடக்கு-கிழக்கின் இனப் பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வுகாண்பதற்காக அவர் மேற்கொண்டுவரும் அனைத்து நடவடிக்கைகளும் பாராட்டப்பட வேண்டியவை.

நாட்டில் எத்தனையோ தலைவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டை வளர்ச்சி பாதையில் இட்டுச் செல்வோம் என உறுதி வழங்கினர்?.

ஆடசிக்கு வருபவர்கள் பதவி ஆசை காரணமாக உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாமல் இழுத்தார்கள்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1993 ஆம் ஆண்டு முதல் நாட்டில் சமாதானம் ஏற்பட பாடுபட்டு வருகிறார். இதற்காகப் பல இன்னல்களையும் அனுபவித்து வருகின்றார்.

நாட்டை உள்ளங்கையில் வைத்துக் காத்துவரும் ஜனாதிபதி, சமாதான நடவடிக்கையை முன்னெடுக்காமல் இழுத்தடித்து வருகிறார் என யாராவது கூறினால் அவர்களுக்கு அது நியாய மானதாகப்படுகிறதா?

ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகளாக அவர் நாட்டில் மேற்கொண்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைக்ளை வேறுயாராவது செய்திருக்கிறார்களா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ஐ-121)

# மட்டுவில் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைக்கப்படவில்லை

## மக்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்த அனர்ததத்தின் போது சேதமடைந்த மட்டுவில் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகள் இதுவரையும் புனரமைக்கப்பட்டாமை குறித்து அப்பகுதி மக்கள் மிகுந்த அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், முகாமைக்குட்பட்டிருக்கும் மட்டுவில் வடக்கு மோகனதாஸ் கிளை மட்டுவல் தெற்கு சோமஸ்கந்தா கிளை ஆகியனவே இன்னமும் திருத்தப்படாமல் இருப்பவையாகும்.

இக்கிளைகளுக்கென சொந்தக் காணியும் கட்டடங்களும் இருக்கின்ற போதிலும் கூட இவை தற்போது வாடைக்கு எடுக்கப்பட்ட தனியார் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன.

இதே சமயம், யுத்த அனர்த்தங்களின் போது சேதமடைந்த கூட்டுறவுக் கிளைகளைப் புனரமைப்புச் செய்வதற்குப் போதிய நிதிவளம் இல்லாமையே முக்கிய காரணம் எனத் தெரிய வருகின்றது. (ப-16)

## சாயி அருளமுதம்



தொழுவத்தில் ஒரு புலி நுழைந்து விட்டால் அங்கே இருக்கும் பசுக்களின் கதியை எண்ணிப பாருங்கள். அப்படி நுழையும் போது அவை தப்பிப்பிழைக்க முடியுமா? அது போலவே மனித இதயத்தில் பேராசை, கோபம், கர்வம், ஆகிய புலிகள் பிரவேசித்து அட்டகாசம் புரியும்போது உண்மை, நீதி, சமாதானம், அன்பு ஆகிய பசுக்கள் தப்பிப்பிழைக்க மாட்டா. இன்று மனித இதயம்-காட்டுமிராண்டி ஆசைகளுக்கும், கொடூரமான பழக்கங்களுக்கும் இருப்பிடமாகி விட்டது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# சமாதானப் பேச்சுக்கள் தொடர உடனடிச் சாத்தியம் இல்லை!

## இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும இடையில் குறுகிய காலத்துக்குள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படக் கூடிய ஏதுநிலைகள் எதுவுமில்லை என கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் மற்றும் நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் உள்ளிட்ட நோர்வே குழுவினர் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இருந்தபோதும் இருதரப்பினருக்கிடையேயும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களின் மிகச் சிரமமான பணியாக அமைந்துவிட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால யோசனை அடிப்படையில் இருதரப்பினரும் பேசுவதற்கு இணங்குகின்றபோதும், நம்பிக்கையைக் கட்டி வளர்க்கும் செயற்பாடுகளில் அவர்கள் தொடர்ந்தும் தோல்விகண்டே வருகின்றனர்.

இந்நிலையிலேயே நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தற்போது இம் முயற்சியில் நேரடியாக இறங்கியுள்ளார்.

உடனடியாக சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கமுடியும் என்ற உயர்ந்த எண்ணத்தை தாம் தற்போது கொண்டிருக்கவில்லை என்றாலும், இருதரப்பினரிடமும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே பிரதான பணியாக இருக்கிறது என ஜான் பீற்றர்சன் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை மாவீரர்தினம் அண்மித்துவருவதால் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மேலும் இறுக்கிக்கொள்ளும் நிலை ஏற்படாமலும், சமாதான முயற்சிகளை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கிலுமே நோர்வேயின் உயர்மட்டச் சந்திப்புக்கள் கொழும்பிலும், வன்னியிலும் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொளளப்பட்டிருப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (த்)

### தமிழ் மக்களுக்கான தீர்வை...

காப்புக் கட்டமைப்பு உட்பட நாட்டின் முக்கிய பதவிகளில் அமர்த்தப்படுவார்கள். இனவெறிபிடித்த இனத்துவேசிகள் இவர்கள். இனவாதச் சிந்தனை ஊட்டலில் ஊறித்திளைத்தவர்கள்.

இவர்களின் சிந்தனைகள் முற்றுமுழுதாக பேரினவாதிகளுக்கு நன்மை பயப்பனவாகவே உள்ளன.

அதிகார மட்டத்தில் உள்ள இவ்வாறான இனவாதச் சிந்தனையாளர்களினால் தமிழ்மக்கள் தமது உரிமைகள் சுதந்திரத்தை இழந்துள்ளனர்.

இவர்களால் பறிக்கப்பட்ட உரிமைகள் தமிழினத்திற்கு அவர்களாலேயே வழக்கப்படும் என்பது சாத்தியப்பாடற்றது.

இந்த உண்மையை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்றவொரு தீர்வும் கிட்டப்போவதில்லை என்பதை சர்வதேசம் நன்றாகவே புரிந்துகொண்டு செயற்பட்டுவருகிறது என்பதை அவர்களின் நடவடிக்கைமூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா நாளுக்கு ஒரு கருத்தையும், நேரத்துக்கு ஒரு விடயத்தையும் கொள்கையாகக்கொண்டு செயற்பட்டுவருகிறார்.

ஒரு நாட்டின் அரச தலைவரே இவ்வாறு நாட்டு மக்களின் நலன் மீது கவனம்செலுத்தாது, நாளுக்கு நாள் தமது கொள்கைகளை மாற்றியமைத்து வருவது சர்வதேச சமூகத்தினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமையாலேயே அவர்கள் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிட்டும் என்ற விடயத்தில் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க நாட்டின் நீதி நிர்வாகக் கட்டமைப்புக்கள் மோசமாகச் சீரழிந்துபோயுள்ளது.

நாட்டில் சட்டத்தை நில்லை நாட்டவேண்டிய சட்டத்துறைசார் அதிகாரிகள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டம், ஒழுங்கு, நீதி என்பவற்றை நிலைநாட்டுவதற்கு பொறுப்பானவர்களே தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதி கேட்போரைத் தாக்கியும், மிரட்டியும் வருகின்றனர்.

மொத்தத்தில் இலங்கை அரசின் சட்டத்துறை, நீதித்துறை நிர்வாகத்துறை என்பன ஊழல் சாக்கடையினுள் மூழ்கிப்போயுள்ளது.

நாட்டின் சட்டத்துறை நீதித்துறை சார்ந்தவர்களே நாட்டின் பிரபல மோசடிக்காரர்களாக இருக்கின்றனர் என்பதை ஜனாதிபதி சந்திரிகாவே இன்று ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிலைநாட்டியுள்ள சட்டமும், ஒழுங்கும், நீதியும் இன்று சர்வதேச மட்டத்தில் பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது பொறுப்புணர்வற்றதும், குறுகிய அரசியல் லாப நோக்கம் கொண்டதுமான அரச தலைமைக்கும் அர்ப்பணிப்பும், போராட்டமும் தூரநோக்கும் கொண்டதான தமிழீழத் தேசியத் தலைமைக்கும் இருக்கும் வேறுபாட்டை வெளிப்படுத்துகின்றது என்றும் காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன் மேலும் தெரிவித்தார். (இ)

### தமிழீழ சட்டக்....

ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து தமிழீழ சட்டக் கல்லூரியின் பெயர்ப் பலகையினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

சட்டக் கல்லூரியின் பிரதான கட்டடத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கம் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

பின்னர் தமிழீழ சட்டக் கல்லூரி வளாகத்துள் இருக்கும் நீதி தேவதையின் உருவச் சிலையை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா திறந்துவைக்க, சட்டக் கல்லூரியின் நூலகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பாளர் கலாநிதி சோமஸ்கந்தன் நாடாவைவெட்டி திறந்து வைத்தார்.

இக்கல்லூரியின் விரிவுரை மண்டபத்தை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் திறந்து வைத்தார்.

இதனை தொடர்ந்து இடம் பெற்ற விசேட நிகழ்வில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப. நடேசன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, புலிகளின் அனைத்துலக பொறுப்பாளர் சோமஸ்கந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சிவநேசன், க.ஈழவேந்தன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் சட்டத்தரணிகள், நீதிபதிகள், காவல்துறை அதிகாரிகள், போராளிகள் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப)

# நெல்லியடியில் குண்டு!

நெல்லியடி ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு முன்னாலுள்ள பற்றைக் காணிக்குள் குண்டு ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டு இராணுவத்தினரால் அது வெடிக்க வைக்கப்பட்டது.

குண்டு கண்டுபிடிக்கப்பட்ட இடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தில் பெருமளவு இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். குண்டைவெடிக்க வைப்பதற்காக அப்பாதையூடான போக்குவரத்து சுமார் ஒருமணி நேரம் நிறுத்தப்பட்டிருந்தது.

தீபாவளிப் பண்டிகைக்கு உடுபுடைவைகள் எடுப்பதற்காக நெல்லியடி நகரப் பகுதியில் பெருமளவான மக்கள் கூடியிருந்தவேளையில் இச்சம்பவம் இடம்பெற்றதனால் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். (ச-101)

### நோர்வே அமைச்சர்...

கார அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இச் சந்திப்பின்போது, தேக்கமடைந்திருக்கும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது குறித்தும், அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் விடயங்கள் குறித்தும், புரிந்துணர்வு உடன்படிக்கையை பேணுவது தொடர்பாகவும், அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பரஸ்பரம் நம்பிக்கையை கட்டி வளர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கையளிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் தான் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும் என விடுதலைப் புலிகள் ஒருவருடகாலமாக கோரி வருகின்றனர்.

இதற்குச் சாதகமான முடிபை நோர்வே வெளிநாட்டு அமைச்சர் ஊடாக ஜனாதிபதி, விடுதலைப் புலிகளின் தலைவருக்கு இன்று அனுப்பிவைக்கக்கூடுமென என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-121)

### சமாதான பேச்சு...

சமூகம் அதன் அளப்பரிய சேவையினை ஆற்றியிருக்கின்றது. அதனைத் தொடர்ந்தும் ஆற்றியும் வருகின்றது.

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத்திட்டத்தில் பல்வேறு தீர்வைகளை அறிமுகப்படுத்த முனைந்து வருகின்றது.

இவ்வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொடுப்பது, வாழ்க்கைச் செலவுஅதிகரிப்புக்கு தீர்வாக அமையமாட்டாது.

ஜனாதிபதி, பொலிஸ் மற்றும் நீதித்துறை மீது குற்றம்சுமத்தியமையானது அத்துறைகள் மீது அவர் நம்பிக்கையை இழந்திருப்பதையே காட்டுகின்றது என்று தமது கட்சி கருதுவதாகவும் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ121)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலினி குகதாசன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலினி குகதாசன் நேற்று (10.11.2004) அன்று புதன்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

இவர் சிற்பாசாரியார் குகதாசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராஜா அன்னபாக்கியம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற தம்பிஐயா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், திருமதி சாந்தினி (திருமலை), காலஞ்சென்ற சுபாஷினி, சாந்தகுமார் (லிபியா), நந்தகுமார், வசந்தகுமாரி, சுபோதினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி யோகேஸ்வரி பாலகிருஷ்ணன்(கொலண்ட்), அன்னலிங்கம் (சிறிலங்கா ரெலிகொம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (11.11.2004) 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி
உடுவில், சுன்னாகம்.
T.P - 0776544558 (9003)

தகவல்
த.குகதாசன்
(கணவர்)



### திரு. தர்மலிங்கம் பரராஜசிங்கம்

JAFFNA TRADERS யாழ்ப்பாணம்,
(யாழ்ப்பாண வணிக நிலையம்)
யாழ்ப்பாண இரும்பகம், யாழ். கதிரவன் இரும்பகம், சாவகச்சேரி.

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும்கொண்ட தர்மலிங்கம் பரராஜசிங்கம் அவர்கள் 10.11.2004 அன்று புதன்கிழமை காலை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சீதேவிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், கிருஷ்ணவதியின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தன் (கனடா) ஸ்ரீரஜனி (அவுஸ்ரேலியா) ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

கௌரி (கனடா), சிவபாலன் (அவுஸ்ரேலியா), தயராஜினி, அனுஷியா ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சண்முகராஜா, நாகரெத்தினம் மற்றும் இராசையா, சரோஜினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

நிருஜா, நிவேதா, பிரவீனன், பிரதாபன், ஜாகவன், ஜாகுலன், அட்சயன், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி:
0212223205, 0777.341168
0777563176

தகவல்: மனைவி, பிள்ளைகள்
27/7 இந்துமகளிர் ஒழுங்கை
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(C/689)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்பாள் தேவஸ்தான

அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தினால் 12.01.2004 அன்று நியமிக்கப்பட்ட பெறுனரும், அவரது உதவியாளர்களுமான கு.சிவகுருநாதன், ந.இராஜதேவன் (ராஜன்), சி.இரட்ணசபாபதி(சிவானந்தம்), ச.சற்குணமூர்த்தி, சு.பரமராசா, விஜயகுமார் (விஜயன்) ஆகியோரும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் 13.10.2004 அன்று நீக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே இவர்களிடம் ஆலயம் சம்பந்தமான பொருட்களையோ, பணங்களையோ ஒப்படைக்கவேண்டாம் என்றும், அத்தோடு இவர்களிடம் ஒப்படைக்கப்படும் பொருட்களிற்கோ, பணத்திற்கோ நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:
கௌரி நோன்பு பூர்த்தி அறிவிப்பு
12.11.2004 வெள்ளி
காலை 6.00 மணி கும்பபூசை
காலை 6.45 மணி உதயபூசை
காலை 7.00 மணி வசந்தமண்ட பூசை
காலை 8.00 அம்பாளும் எம்பெருமானும் வீதிவலம் வருதல்.
காலை8.30 மணிமுதல் காப்பு வழங்கல் இடம்பெறும்.

இங்ஙனம்
தேவஸ்தான பரம்பரை முகாமை
தர்மகர்த்தாக்கள்
(C/690)

ரசிகப் பெருமக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்
ராஜா, யாழ்ப்பாணம்
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
அஜித் (இருவேடம்) பூஜா

அட்டகாசம்
பு.நேரம் 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவுசெய்துகொள்ளலாம்.
(C/692)

நாதன்ஸ் சினிமா ஸ்தாபனத்தாரின் இனிய தீபாவளி வாழ்த்துக்கள் யாழ். இரசிகர்களுக்கு உரித்தாகுக.
10.30, 2.30, 6.30 இற்கு
கம்பஸ்
இரவு 8.30 இற்கு
SPIDER MAN 1
மிகவிரைவில்
யாழ்ப்பாணம் (றீகல்ஸ்)
(சி-675)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.